பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 06 வெள்ளிக்கிழமை (22.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 269

## நாளை மாகாணசபைத் தேர்தல்

# வன்முறைகள் எல்லைமீறி விட்டதால் கண்ட இடத்தில் சுட பொலிஸாருக்கு உத்தரவு

## பாதுகாப்பை நிலைநாட்ட இராணுவத்துக்கு அழைப்பு

கொழும்பு,ஓகஸ்ட் 22

வடமத்திய மாகாண, சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தல்களை யொட்டி வன்முறைகள் எல்லைமீறிவிட்டதால்-

தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கண்ட இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு - சுடுவதற்கு - பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினரும் இரண்டு மாகாணங்களிலும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் வன்செயல்கள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொருட்டே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்

நாளை நடைபெறவிருக்கும் வடமத்திய மீற்றும்சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலின் போது வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது கண்ட இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்ஊடகப்பேச்சாளர்ரஞ்சித்தகுணசேகரா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

வன்முறைகளைத் தடுக்கும் பொருட்டு தேவைப்படின் பாதுகாப்புக்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தத் தயாராக பொலிஸார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காயில் ஹெலித் தாக்குதல்

கொழும்பு, ஓக.22

துணுக்காய் நகரை நோக்கி முன்னேறும் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தும் நகரப் பகுதியில் விமானப்படையின் எம்.ஐ.24 ஹெலி கொப்படர்கள் நேற்று மாலை 6.30 மணிக்கு தாக்குதல் நடத்தின. இத் தாக்குதல் வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டது என்றும் முன்னேறும் 57 ஆவது படையணிக்கு உதவியாக இத் தாக் குதல் நடத்தப்பட்டது என்றும் விமானப் படைப் பேச்சாளர் விக் கொமாண்டர் ஜானக நாணயக்கார தெரிவித்தார்.

(அ-1)

## கிழக்குப் பல்கலைக்கழக விடுதியில் வைத்து சிங்களமாணவன் நேற்றிரவு சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, ஓக. 22

வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக் குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத் துவ பீட இறுதிவருட சிங்கள மாணவன் ஒருவர் நேற்றிரவு 9.15 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாணவர் விடுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

குருணாகல் மாவட்டம் பொத்துஹரவைச் சேர்ந்த பி.சமரசிங்க (வயது 27) என்ற மாணவனே சுட்டுக் கொல்லப்பட் டவர் ஆவார்.

சம்பவ இடத்துக்கு ஏறாவூர் பொலிஸாரும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றில் சரணடைந்த மேர்வின் நிபந்தனைப் பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஓக. 22

'சிரச' தொலைக்காட்சி நிறுவனப் படப்பிடிப்பாளர்களை அச்சுறுத்தி அவர்களின் புகைப்படக் கருவிகளை (கமெராக்களை) பிடுங்கிய விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தால் கைதுசெய்யும்படி உத்தரவிடப்பட்டிருந்த அமைச்சர் கலாநிதி மேர்வின் சில்வா நேற்றுத் தாமாகவே நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

சாட்சிகளை அச்சுறுத்திக் குழப்புதல் மற்றும் பிற வன்முறைகளில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையுடன் ஐம்பதாயிரம் ரூபா காசுப் பிணையிலும் ஐந்து லட்சம் ரூபா உறுதிப் பிணையிலும் செல்ல அவருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காயை சுற்றிவளைக்கும் முன்நகர்வில் படையினர் நேற்று

கொழும்பு, ஓக. 22

வன்னியில் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தித் தொடரும் இராணுவத்தினர் நேற்று அதிகாலை துணுக்காயை நோக்கி முன்னேறத் தொடங்கியுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவினர் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பிற்கும் மத்தியில் துணுக்காய் நகரைச் சுற்றிவளைக்கத் தொடங்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு, நேற்று அதிகாலை வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் ஊடாக இராணுவத்தினர் முன்னேறத் தொடங்கினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## குமுழமுனையில் ஷெல் தாக்குதல் பொதுமக்கள் 5 பேர் காயம்

வவுனியா, ஓக. 13

மணலாறில் இருந்து நேற்று நண்பகல் 12 மணியளவில் குமுழமுனைப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர்.

நண்பகல் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் அரை மணிநேரம் நீடித்ததாகவும் எட்டு வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஆர்.சிவராசா (வயது 30), ஈ. பாஸ்கரன்(வயது 33), ஆறுமுகத்தான்குளத்தைச் சேர்ந்த மயூரன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கை படையினரால் இலகுவில் கைப்பற்ற முடியாது; புலிகளின் மௌனம் இராணுவத்தினரை கவர்ந்திழுக்கும் உத்தி

### பாதுகாப்புத்துறை ஆய்வாளர் கேணல் சுசந்தா

கொழும்பு, ஓக 22

இலங்கை அரசாங்கத்தின் படையினர் வடக்கை இலகுவில் கைப்பற்றிவிட முடியாது. விடுதலைப்புலிகளின் பின்வாங்கல் படையினரைக் உள்ளே கவர்ந்திழுக்கும் உத்தியாக அமையலாம். அவ்வாறு செய்த பின்னர் புலிகள் மூர்க்கமான தாக்குதலை நடத்தக்கூடும். அவர்களின் மௌனம் படையினருக்கு நல்லதாக அமைய யாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முன்னாள் இராணுவ அதிகாரியும் பாதுகாப்புத் துறை ஆய்வாளருமான கேணல் சுசந்தா செனவிரத்னா.

ஏ.பி.செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் அதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் இப்போதைய வன்னிப் போர் குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசாங்கப் படையினரின் வடக்கு நோக்கிய யுத்த முன்னெடுப்புக்கள் மிகவிரைவில் ஆரம்பமாகவுள்ள பருவப்பெயர்ச்சி மழை காரணமாக தடைப்படலாம்.

படையினர் கிழக்கைக் கைப்பற்றியது போன்று வடக்கை மிக இலகுவாகக் கைப்பற்ற முடியாது. ஏனெனில் விடுதலைப் புலிகளால் பெருமளவில் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டிருக்கும். படை முன்நகர்வுகள் மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் பின்வாங்கல், படையினரை கவர்ந்திழுக்கும் உத்தியாக அமையலாம். காடுகளில் பதுங்கியிருக்கும் புலிகள் தம்வசம் இன்னமும் ஆட்லறிகள் மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளைக் கேளுங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி
வருகின்றது " மீண்டும் வாழ்வோம் ".
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.இ.சத்தியசீலன்

கரவெட்டி பிரதேச செயலர் உயர் திரு இ.சத்திய சீலன் (B.A) 2008ம் ஆண்டின் முதுகலைமாணித் தேர்விலும் (M.A) சிறப்புத் தேர்ச்சி பெற்றமையை பாராட்டி கரவெட்டி கரம்பான் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபையினராகிய நாம் வாழ்த்துகின்றோம் .

க.மாணிக்கவாசகர் தலைவர். (சி/554252) வ.கந்தசாமி செயலாளர்.

## பாராட்டி வாழ்த்து

கரவெட்டிப் பிரதேச செயலர் திரு.சி. சத்தியசீலன் B.A 2008ம் ஆண்டின் முதுகலைமாணித் தேர்விலும் (M.A) சிறப்புச் தேர்ச்சி பெற்று சித்தியெய்தியமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கரம்பான் வீரகத்திப் பிள்ளையார் கோவில் அர்ச்சகர்கள்,
திரு.அ. சுப்பிரமணியம், திரு.சு. சத்தியநாதன்.



## இவரைக் காணவில்லை



சுழாவடி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த
யேசுரத்தினம் குணரத்தினம்
(வயது 31 - மனநோயாளி)
என்பவரை 15.08.2008 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியிலிருந்து காணவில்லை.
இவரைக் கண்டவர்கள் கீழுள்ள முகவரிக்கு தகவல் தரவும்.

கு. யேசுரத்தினம் (தந்தை)
ஐங்கரன் தொலைத் தொடர்பகம்,சுழாவடி,
ஆனைக்கோட்டை. தொ.பே : 7722



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 22 ★ 02 ★ 1920



ஆண்டவன் அடியில் 23 ★ 07 ★ 2008

### அமரர் திரு.வேலுப்பிள்ளை கனகசபை
*(ஒய்வுபெற்ற ஆசிரியர்)*
திதி:பஞ்சமி 22.08.2008

அன்பினாலும் அதியுயர் அரவணைப்பினாலும்
எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழ
வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே
அம்மாவை இழந்த கவலை இன்னும்
ஆறவில்லை எங்களை தனிமரமாய்
தவிக்க விட்டு எங்கு போனீர்கள்?
அம்மா போய் இரண்டரை மாதத்திற்குள்
அம்மாவிடம் நீங்களும் போய்விட்டீர்களா?
ஐயா, அம்மா உங்கள் இருவரின்
ஆன்மாவும் ஆத்ம சாந்தியடைய இறைவனை
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!*

'தீக்காணை',
குருக்கள் பகுதி, கரணவாய், கரவெட்டி. குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 16 ★ 07 ★ 1932



இறப்பு 23 ★ 07 ★ 2008

### தம்பு கிருஸ்ணபிள்ளை

எமது குடும்பத் தலைவர் தம்பு கிருஸ்ணபிள்ளை கடந்த 23.07.2008 புதன்கிழமை இறைபதம் எய்திய செய்தி கேட்டு தங்கள் அனுதாபங்களை தொலைபேசி வாயிலாக தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மேலும் அனைத்து வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (22.08.2008) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வைரவர் கோவிலடி,*
*பத்தமேனி, அச்சுவேலி.* (77373) குடும்பத்தினர்.


## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் 13 வது ஆண்டாக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் இடையே லீக் முறையில் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை பி.ப. 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

* * *

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 'சுப்பர் 6' சுக்கு தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையேயான ஆட்டங்களில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டங்களின் கலந்து கொள்ளவுள்ள பாடசாலை அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் - யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

* சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானம் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி எதிர் கரவெட்டி விக்கினேஸ் வராக் கல்லூரி.

* தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானம் - கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி.

* * *

கோண்டாவில் அம்பிகை முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 1 மணியளவில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் சு.இராமலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயத்தின் ஒய்வுபெற்ற ஆரம்பக் கல்வி ஆலோசகர் திருமதி க.பிரகதீஸ்வரசர்மா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திரா தேவி சுபாஷ்சந்திரன், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி விவேகானந்தன் மாலதி தேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

* * *

திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூட சிறுவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப. 1 மணிக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் யாழ்ப்பாணம், சில்லாலை, கரவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிறுவர் கலைக்கூட சிறுவர்கள் பங்கேற்கவுள்ள இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கெயர் நிறுவனத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் ஜோய்றோஸ் ஞானேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மெய்வண்மைத் தொழில்நுட்ப அலுவலரும், யாழ். புனித பத்திரிசியார் ஆசிரியருமான ம.பேட்டி பனிஸ்ரரும் கலந்து கொள்வர். (1)


## தவறிவிட்டது

*இல.24, இராசசிங்கம் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6 எனும் முகவரியுடைய திரு. லோகசிங்கம் திருவருட்செல்வன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (760162450V )தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிரதான தபாலகத்தில் பணிபுரியும் இ.தனம் என்பவரிடம் ஒப்படைக்கவும் தொ.பே. 0716113135*

ராஜா 2 யாழ்ப்பாணம்
75 ஆவது நாளை நோக்கி
சகல
கமல்ஹாசன், அசின்
தசாவதாரம்



காட்சிகள் 10.30–2.00

## மணமகள் தேவை

*உயர் கௌரவ குடும்பம் 1979, பூரட்டாதி, மீனம் செவ்வாய் - 10 இல் MBBS வைத்தியருக்கு, பட்டத்துடன் அரச பதவியிலுள்ள மணமகள் தேவை. (ஆசிரியர், வைத்தியர், பொறியியலாளர், வங்கி - முகாமைத்துவம் - பொது நிர்வாகம் இவற்றுக்கு இணையான சேவையினர், பல்கலைக்கழக மாணவியும்) அருள் முருகன் திருமணப் பணியகம், 03,யாழ். வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்ப்பாணம். T.P. 222 9334*

## விற்பனைக்கு

*நல்ல நிலையிலுள்ள HONDA சாலி மோட்டார் சைக்கிள், இத்தாலி பெயின்ரிங் ஏயர் கொம்பிறசர், மின்சார தண்ணீர் பம்பி [illegible]*
*தொடர்பு: இல. 155A, K.K.S. றோட் (குளப்பிட்டி சந்தை அருகாமை) கொக்குவில்.*


## இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை 2008 ஆண்டு பொதுக்கூட்டமும் நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் 2008 ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் 21.09.2008ல் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அதற்கான நியமனப்பத்திரங்களை யாழ்.கிளைக்காரியாலயத்தில் எதிர்வரும் 27.08.2008 தொடக்கம் 31.08.2008 வரை ரூபா 100.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளமுடியும். (தினமும் மு.ப.09.30 மணி தொடக்கம் பி.ப.3.30 மணி வரை).

எதிர்வரும் 01.09.2008 (திங்கட்கிழமை) மு.பகல் 09.30 மணி தொடக்கம் பி.ப.3.30 மணி வரை நியமனப் பத்திரங்கள் கிளைக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்பவரும், முன்மொழிபவரும், வழிமொழிபவரும் தாக்கல்செய்யும் வேளையில் சமுகமளித்தல் வேண்டும்.

நியமனப்பத்திரங்கள்: கௌரவ தலைவர் - 01, கௌரவ உபதலைவர் - 01, கௌரவ செயளாளர் - 01, கௌரவ பொருளாளர் -01, கௌரவ கிளை குழு உறுப்பினர்கள் - 06 என்னும் பதவிகளுக்காக கோரப்படுகின்றன. நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் போது தங்கள் சுயவிவரக் கோவை ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
(இதற்கான பத்திரம் தரப்படும்).
மேலும் விவரங்களுக்கு கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை
*73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*


## மரண அறிவித்தல்

### *செபஸ்தி ஜேக்கப்*



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், குளமங்கால், மல்லாகத்தை வசிப்பிடமாகவும்கொண்ட செபஸ்தி ஜேக்கப் 17.08.2008 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தி - ஆனாச்சி தம்பதியின்ரின் அன்பு மகனும், செபமாலை பாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான அருளப்பு - றோசம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனியாப்பிள்ளை, அடைக்கலம் மற்றும் மரியாள்பிள்ளை, மாகிறேட், செபமாலை ஆகியோரது பாசமிகு சகோதரரும், குணசீலன், குணவதி, ஜெயசீலன், ரட்ணசீலன், ராஜசீலன், ஜெயவதி, புனிதவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மொறினா, தேவதாஸ், எட்னாமரிய கார்மல், அன்ரனிவிக்ரர், சுரேன் ஆகியோரின் மாமனும், சாளி, டிவியன், நெசி, எமக்சன், பெர்னாண்டோ ஆகியோரின் பேரனும், நட்சேத்திரம், அற்புதம் ஆகியோரின் மைத்துனரும், அருளப்பு, நீக்கிலாஸ் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.08. 2008) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டு பின்னர் சவேரிய சேமக்காலையில் பூதவுடல் நல் லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளமங்கால்,*
*மல்லாகம்.*
தகவல்: குடும்பத்தினர்.



## Medecins Sans Frontieres (MSF)-France

MSF is an International independent humanitarian medical aid agency committed to two objectives: providing medical aid wherever needed, regardless of race, religion, politics or sex and raising awareness of the plight of the people we help.

**VACANCY**
**POSITION: Translator**

we are looking for a skilled, dynamic person to suit the above position to our office/activities in Point Pedro.The Translator will work with a team that comprises a psychologist and doctors.
Contract period: **6 - 8 Weeks (casual basis)**
Skills required:
.Excellant commmunication/translation skills in English.
Good interpersonal skill

Please forward your **CV** along with contact phone numbers to the following address before **28th August 2008.** Only short listed candidates will be invited for the interview.

**Project Coordinator,**
**Medecins Sans Frontieres (MSF)-France,**
Manthikai,
Point Pedro.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் மீளக் குடியமர்வோர் விவரம் பதியும்பணி திங்கள் ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம்,ஒக.22

அதிஉயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள வலி-வடக் கில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணி களை துரிதப்படுத்த மீளக்குடியமர்வோர் விவரங்களை பதியும் பணி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வலி - வடக்கு பிரதேச செயலர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வாழும் மக்களை குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, காணி உறுதி, குடும்ப அங்கத்தவர்களின் விவரம், உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றுடன் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் வலி - வடக்கு பிரதேச செயலகத்துக்கு சமூகமளிக்குமாறு அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக அழைக்கப்பட்ட திகதிகள் வருமாறு:

| கி.சே.பிரிவு இல. | கி.சே. பிரிவு | திகதி |
|---|---|---|
| ஜே/221 | இளவாலை வடக்கு | |
| ஜே/222 | இளவாலை வடமேற்கு | 25.08.2008 |
| ஜே/223 | வித்தகபுரம் | |
| ஜே/224 | பன்னாலை | 26.08.2008 |
| ஜே/227 | தெல்லிப்பழை கிழக்கு | |
| ஜே/228 | தெல்லிப்பழை | 28.08.2008 |
| ஜே/229 | துர்க்காபுரம் | 29.08.2008 |
| ஜே/230 | தந்தைசெல்வா புரம் | |
| ஜே/238 | கட்டுவன் | |
| ஜே/239 | கட்டுவன் மேற்கு | 02.09.2008 |
| ஜே/244 | வசாவிளான் கிழக்கு | |
| ஜே/245 | வசாவிளான் மேற்கு | 04.09.2008 |
| ஜே/225 | கொல்லங்கலட்டி | |
| ஜே/226 | நகுலேஸ்வரம் | 05.09.2008 |
| ஜே/231 | மாவிட்டபுரம் | |
| ஜே/232 | மாவிட்டபுரம் தெற்கு | 08.09.2008 |
| ஜே/233 | காங்கேசன்துறை மேற்கு | |
| ஜே/234 | காங்கேசன்துறை மத்தி | |
| ஜே/235 | காங்கேசன்துறை தெற்கு | 09.09.2008 |
| ஜே/236 | பளை வீமன்காமம் வடக்கு | |
| ஜே/237 | பளை வீமன்காமம் தெற்கு | 12.09.2008 |
| ஜே/240 | தென்மயிலை | |
| ஜே/241 | வறுத்தலை விளான் | 15.09.2008 |
| ஜே/242 | குரும்பசிட்டி | |
| ஜே/243 | குரும்பசிட்டி கிழக்கு | 16.09.2008 |
| ஜே/246 | மயிலிட்டி வடக்கு | 18.09.2008 |
| ஜே/247 | தையிட்டி கிழக்கு | |
| ஜே/249 | தையிட்டி வடக்கு | 19.09.2008 |
| ஜே/250 | தையிட்டி தெற்கு | |
| ஜே/248 | மயிலிட்டிதுறை தெற்கு | |
| ஜே/251 | மயிலிட்டிதுறை வடக்கு | 22.09.2008 |
| ஜே/252 | பலாலி தெற்கு | |
| ஜே/253 | பலாலி கிழக்கு | 23.09.2008 |
| ஜே/254 | பலாலி வடக்கு | |
| ஜே/255 | பலாலி வட மேற்கு | 25.09.2008 |
| ஜே/256 | பலாலி மேற்கு | |

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மேலும் 24 பேருக்கு உதவிக் கொடுப்பனவு

நவாலி,ஒக.22

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேலும் 24 பேருக்கு உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவிற்காக புதிதாக விண்ணப்பித்திருந்தவர்களில் 24 பேருக்கு இம்மாதம் தொடக்கம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என பிரதேச சமூகசேவை உத்தியோகத்தர் அருந்தவராசா தெரிவித்தார். (202-100)

## தெல்லிப்பழை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வு இன்று

வலி.வடக்கு,ஒக.22

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் இ.அருணகிரி தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் 25 வருடம் உள்ளூராட்சி சேவையை பூர்த்தி செய்தவர்கள் கௌரவிக்கப்படுவதுடன் சிறந்த சனசமூக நிலையங்கள், சுத்தமான உணவு கையாளும் நிறுவனங்கள், ஆரோக்கியமான தாய் சேய் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் ஜி.சீ.ஈ.சாதாரணதரம், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(203-86)

## கட்டைவேலியில் கூட்டுறவுநகர்

யாழ்ப்பாணம்,ஒக.22

நெல்லியடி,கட்டைவேலி ப.நோ.கூ. சங்கத்தின் கூட்டுறவு நகர் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.




# 'யூஸ்' உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோருக்கு இனிவரும் காலங்களில் சிபாரிசு செய்யப்படமாட்டாது

### பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.22

இனிவரும் காலங்களில் 'யூஸ்' உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோருக்கு சுகாதாரத் திணைக்களம் சிபாரிசு செய்யமாட்டாது என்று சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

அண்மைக் காலங்களில் மீண்டும் 'யூஸ்' உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளன. இதனால் குடாநாட்டில் உணவு, நீரினால் பரவும் நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதுதவிர யூஸ் உற்பத்தியாளர்கள் இந்த உற்பத்திகள் தொடர்பாக எவ்வித பரிசோதனைகளையும் மேற்கொள்ளாது நிறமூட்டிகள், பாதுகாப்பிகள் போன்ற உணவுச் சேர்மானங்களை அளவிற்கு மேலதிகமாக சேர்ப்பதனால் பாவனையாளர்கள் வெவ்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

உற்பத்தியாளர்கள் 'யூஸ்' பொதிசெய்ய பயன்படுத்தும் பொலித்தீன் உறை உணவு உற்பத்திக்கு உகந்ததாக இல்லாமையினால் ஏற்படப்போகும் பின்விளைவுகளும் பாரதூர மானதாகும்.

இந்த உற்பத்திகளைக் களஞ்சியப் படுத்தும்போதும் விற்பனையின்போதும் குளிரூட்டியில் பாதுகாக்க வேண்டும்.

இவை அநேகமான இடங்களில் ரெஜிபோம் பெட்டிகளில் வைத்து விற்பனை செய்யப்படுவதனால் விரைவில் பழுதடைந்து விடுகின்றன.

அவற்றை உட்கொள்வதால் ஏற்படும் வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களால் மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு இனிவரும் காலங்களில் மேற்குறிப்பிட்ட விடயங்களை கருத்திற்கொள்ளாது 'யூஸ்' உற்பத்தி, விற்பனை செய்பவர்களுக்கான உரிமத்திற்கு சுகாதாரத் திணைக்களம் சிபாரிசு செய்யமாட்டாது என்பதை அறியத் தருகின்றேன் - என்றுள்ளது. (203)

## கட்டாக்காலிகளின் தொல்லை; போக்குவரத்துச் செய்வதில் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக.22

யாழ்.நகரில் கட்டாக் காலியாகத் திரியும் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளன.

யாழ்.நகர் பிரதேசம் மற்றும் பண்ணை முற்றவெளி, கொட்டடி, கே.கே.எஸ்.வீதி போன்ற இடங்களில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

யாழ்.நகர் பஸ்தரிப்பு நிலைய சுற்றாடல் பகுதியிலும் கட்டாக்காலியாக திரியும் நாய்களால் பயணிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த நாய்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-224)

### நலிவுற்றோருக்கு உதவும் திட்டத்தின் கீழ்

# யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் புற்றுநோயாளருக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஒக.22

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நலிவுற்ற பிரிவினருக்கு உதவும் திட்டத்தின் கீழ் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோயாளர் பிரிவில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கு தேவையான உலர் உணவுப் பொருள்களை அன்பளிப்பாக விநியோகிக்க வுள்ளதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரி வித்தார்.

இந்த இலவச உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலை விடுதியில் இடம்பெறும்.

வைத்தியசாலையில் புற்றுநோயாளர் விடுதியில் தற்போது நாற்பது நோயாளர் கள் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அரிசி, மா, சீனி, பால்மா, பருப்பு போன்ற உலர் உணவுப் பொருள்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர் களுக்கு வழங்கப் படவுள்ளன.

சங்கத்தின் நலிவுற்றோர் திட்டத்தின் கீழ் இம்முறை புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உணவுப் பொருள்கள் வ்ழங்கும் நடைமுறையை கூட்டுறவுப் பணியாளர்கள் வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-224)

# சிறந்த விவசாயிகளை தெரிவு செய்வதற்கான போட்டிகள் விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன

### விவசாய பிரதிப் பணிப்பாளர் தகவல்

நல்லூர்,ஒக.22

2008ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களைக் கௌரவிப்பதற்கான போட்டிகள் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.

இவை எட்டுப் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன என்று விவசாயப் பிரதிப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

* நெல் உற்பத்தியில் 3.5 மெற்றிக் தொன் விளைவுபெற்ற விவசாயி
* சேதனப் பண்ணையை வினைத் திறனாகச் செயற்படுத்தும் சிறந்த சேத னப் பண்ணையாளர்.
* சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்
* சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்
* பெண் தலைமைத்துவம் கொண்ட சிறந்த விவசாயி
* சிறந்த சோளச் செய்கையாளர் (வருமானம் ¼ ஏக்கர் ஆகக் குறைந்தது 20 ஆயிரம் ரூபா)
* சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர் (வருமானம் ¼ ஏக்கர் 250 கிலோ கிராமுக்கு மேல் விளைவு பெற்றவர்.
* சிறந்த குரக்கன் செய்கையாளர் (¼ ஏக்கருக்கு 200 கிலோ கிராமிற்குமேல் விளைவு பெற்றவர்)

ஆகிய எட்டுப் பிரிவுகளிலும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவுகளில் இருந்து குறைந் தது 10 விவசாயிகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. குறைவாக விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட பகுதி நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களையும் பெறும் விவசாயிகள் சான்றி தழ்கள் வழங்கிக் கௌரவிக்கப் படுவர்.

மாவட்ட மட்டப் போட்டிக்கு விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் சகல பகுதிகளிலிருந்து முதலிடம் பெற்ற விவசாயிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

விவசாய போதனாசிரியர் பிரிவுக்கான போட்டிகள் அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும், மாவட்ட மட்டப் போட்டிகள் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்னரும் இடம் பெறும். ஒக்ரோபர் மூன்றாவது வாரத்தில் மாவட்ட மட்ட விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் விவசாயிகளுக்கு தலா 2000, 1500, 1000 ரூபாவிற்கான காசோலையும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் விவசாயிகள் தங்களது பிரிவு விவ சாயப் போதனாசிரியரிடம் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்திக் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-111)

# பழப்பயிர்ச் செய்கையை மேம்படுத்த உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.22

யாழ்மாவட்டவிவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பழப்பயிர்ச் செய்கையினை மேம்படுத்தும் நோக்கில் விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரை யின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ளது.

யாழ் விவசாயத் திணைக்களம் பிரதி விவசாய விரிவாக்கல் பணிப்பாளர் தெரிவித்துள்ள தகவல்களின்படி, 45 கத்தரிக்கும் வாள்களும், 36 கத்தரிக்கும் உபகரணங்களும், மாதிரி கத்தரிக்கும் உபகரணங்கள் இரண்டும் உடனடித் தேவையாக உள்ளன.

தற்போதைய போக்குவரத்துச் சீரின்மை காரணமாக மேற்படி பழப்பயிர் அறுவடை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக தெரியப்படுத்திய யாழ் பழச் செய்கை விவசாயிகள் அவற்றைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

பழப்பயிர்ச் செய்கை மேம்பாட்டிலும் அதனை மேற்கொள்ளும் விவசாயிகளினது கோரிக்கையின் பேரிலும் கவனம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளார் -என்று சமூக சேவைகள் அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீஜிங் ஒலிம்பிக்கில் ஆசிய அணிகள் எழுச்சி
# ஐரோப்பிய, அமெரிக்க அணிகள் அதிர்ச்சியில்

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் ஆசிய அணிகள் எழுச்சி கண்டுள்ளன.

சீனா, தென்கொரியா, ஜப்பான் என மூன்று நாடுகள் ''முதல் 10'' வரிசையில் இடம்பிடித்து ஒலிம்பிக்கில் ஆதிக்கம் செலுத்தி வந்து ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அணிகளுக்கு அதிர்ச்சியளித்து வருகின்றன.

ஒலிம்பிக் போட்டிகள் என்றாலே ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அணிகள் தான் சாதிக்கும் என்ற கருத்துக்குப் பலமான அடி விழுந்துள்ளது. சமீப காலமாக மிகச்சிறப்பாகச் செயற்பட்டு வரும் சீனா, தென்கொரியா, ஜப்பான் போன்ற ஆசிய அணிகள் எழுச்சி கண்டு வருகின்றன.

1988 சியோல் ஒலிம்பிக்கில் ஐரோப்பிய அணிகள் 68.9 சதவீத தங்கப் பதக்கங்களை வென்றன. இரண்டாவது இடத்தை அமெரிக்கா (17 சதவீதம்) கைப்பற்றியது. ஆசியா வெறும் 9.1 சதவீத தங்கத்தை மட்டுமே கைப்பற்றியிருந்தது. ''முதல் 10'' அணிகளின் வரிசையில் தென்கொரியா (4ஆவது இடம்) மட்டும் இடம்பிடித்திருந்தது.

ஆனால், அடுத்து நடந்த பார்சிலோனா (1992) ஒலிம்பிக்கில் ஆசிய அணிகளிடம் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. சீனா, தென்கொரியா என இரண்டு ஆசிய அணிகள் ''முதல் 10'' பட்டியலில் இடம்பெற்றன. மொத்த தங்கத்தில் ஆசியா 15 சதவீதத்தை கைப்பற்றியது. ஐரோப்பா 56.9, அமெரிக்கா 23.1 சதவீத தங்கமும் வென்று முதலிரண்டு இடத்தைப் பிடித்தன.

1996 அட்லான்டா ஒலிம்பிக்கில் ஆசியா சற்று பின்னடைவைச் சந்தித்து. ஐரோப்பாவின் பங்கும் 3 சதவீதம் குறைந்து 53.9 சதவீதத்துக்கு வந்தது. தென் மற்றும் வட அமெரிக்க அணிகள் புத்துயிர் பெற்றன. இவர்களின் பங்கு 22.9 சதவீதமாக அதிகரித்தது.

சிட்னி ஒலிம்பிக்கில் (2000) ஐரோப்பா தனது பெருமையை மீண்டும் பெற்றது. 55.6 சதவீத தங்கத்துடன் முதலிடம் பிடித்தது. ஆசியா மற்றும் அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த அணிகள் தலா 17.8 சதவீத தங்கத்துடன் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துகொண்டன.

2004இல் நடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் ஐரோப்பிய அணிகள் முதன்முறையாக 50 சதவீதத்துக்கு (46.2) குறைவாக தங்கம் வென்றன. ஆசியா 23.9 சதவீத தங்கம் வென்று, இரண்டாவது இடத்தைப் பிடித்தது. தற்போது நடந்துவரும் பீஜிங் ஒலிம்பிக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை வரையிலான தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கையில் ஐரோப்பா 42.4 சதவீத தங்கம் வென்றுள்ளது. ஆசியாவின் பங்கு 33.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.

''முதல் 10'' அணிகள் வரிசையில் சீனா (1), தென்கொரியா (6ஆவது), ஜப்பான் (7ஆவது) என மூன்று அணிகள் இடம்பெற்றுள்ளன. எழுச்சி கண்டுள்ள ஆசிய அணிகள் அடுத்துவரும் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடினால், ஒலிம்பிக்கில் ஐரோப்பாவின் ஆதிக்கத்தைத் தகர்க்கலாம்.

## மின்னல் வேக வீரர் உசைன் போல்ட்!



ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையுடன் தங்கம் வென்றார் ஜமெய்க்காவின் 21 வயது வீரர் உசைன் போல்ட். கடந்த புதன்கிழமை நடந்த போட்டியில் அவர் 19.30 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார். இது புதிய உலக சாதனையாக அமைந்தது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 100 மீற்றர் போட்டியிலும் இவர் உலக சாதனையுடன் (9.69 விநாடி) தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## தங்கத்துக்கான வாய்ப்பை இழந்தது பிரேசில்



ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் அரையிறுதியாட்டத்தில் தோல்வியடைந்ததால் பிரேசிலின் தங்கக் கனவு தகர்ந்துள்ளது.

ஒலிம்பிக் கால்பந்து போட்டி இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. ஆண்கள் கால்பந்து போட்டியில் செவ்வாய்க்கிழமை அரையிறுதி ஆட்டங்கள்நடந்தன. ஒரு அரையிறுதியில் தற்போதைய சாம்பியனான ஆர்ஜென்ரீனாவும், பிரேசிலும் மோதின.

5 முறை உலக சாம்பியனான பிரேசில் அணி இதுவரை ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றதில்லை. அந்த நீண்ட கால சோகத்துக்கு விடை கொடுக்கும் முயற்சியுடன் களமிறங்கிய பிரேசிலுக்கு இந்த முறையும் ஏமாற்றமே மிஞ்சியது. முதல் பாதியில் யாரும் கோல் போடவில்லை. 2ஆவது பாதியில் ஆர்ஜென்ரீனா ஆதிக்கம் செலுத்தியது. 52 மற்றும் 58ஆவது நிமிடங்களில் ஆர்ஜென்ரீனா வீரர் செர்ஜியோ அகுரோ கோல் போட்டார். 76ஆவது நிமிடத்தில் மற்றொரு ஆர்ஜென்ரீனா வீரர் ஜுவான் ரைகியூல்மி பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி மேலும் ஒரு கோல் அடித்தார். முடிவில் 30 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.



மற்றொரு அரையிறுதியில் நைஜீரியா 4-1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை தோற்கடித்தது. தங்கப்பதக்கத்துக்கான இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி நாளை சனிக்கிழமை நைஜீரியாவை சந்திக்கிறது. [50]

## கென்ய வீராங்கனைக்குத் தங்கம்

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கென்ய வீராங்கனை பலீமா ஜெலிமோ தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

18 வயதான பலீமா, இந்த ஆண்டு நடைபெற்ற அனைத்து 800 மீற்றர் போட்டிகளிலும் வெற்றி பெற்றிருந்தார். இந் நிலையில் அவர் பீஜிங்கில் 54.87 விநாடிகளில் ஓடி முதல் இடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். கென்யாவைச் சேர்ந்த ஜனேத் வெள்ளிப் பதக்கத்தையும், மொரோக் கோவின் அஸ்னா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (50)

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நிலை | நாடு | தங். | வெள். | வெண். | மொ. |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 45 | 15 | 21 | 81 |
| 2 | அமெரிக்கா | 27 | 28 | 28 | 83 |
| 3 | பிரிட்டன் | 17 | 11 | 11 | 39 |
| 4 | ரஷ்யா | 14 | 14 | 18 | 46 |
| 5 | ஆஸ்திரேலியா | 11 | 13 | 13 | 37 |
| 6 | ஜேர்மனி | 11 | 08 | 10 | 29 |
| 7 | வடகொரியா | 08 | 10 | 06 | 24 |
| 8 | ஜப்பான் | 08 | 06 | 09 | 23 |
| 9 | இத்தாலி | 06 | 07 | 08 | 21 |
| 10 | உக்ரைன் | 05 | 05 | 08 | 18 |
| 11 | நெதர்லாந்து | 05 | 05 | 04 | 14 |
| 12 | பிரான்ஸ் | 04 | 12 | 14 | 30 |
| 13 | ஸ்பெயின் | 04 | 05 | 02 | 11 |
| 14 | ஜமெய்க்கா | 04 | 03 | 00 | 07 |
| 15 | ருமேனியா | 04 | 01 | 03 | 08 |
| 16 | போலந்து | 03 | 04 | 01 | 08 |
| 17 | நியூசிலாந்து | 03 | 01 | 05 | 09 |
| 18 | சுலோவாக்கியா | 03 | 01 | 00 | 04 |
| 19 | கனடா | 02 | 06 | 05 | 13 |
| 20 | கென்யா | 02 | 04 | 02 | 08 |
| 21 | பிரான்ஸ் | 02 | 03 | 08 | 13 |
| 22 | செக் | 02 | 03 | 00 | 05 |
| 23 | டென்மார்க் | 02 | 01 | 03 | 06 |
| 23 | தென்கொரியா | 02 | 01 | 03 | 06 |
| 25 | எதியோப்பியா | 02 | 01 | 00 | 03 |
| 26 | சுவிஸ்சர்லாந்து | 02 | 00 | 03 | 05 |
| 27 | ஜோர்ஜியா | 02 | 00 | 02 | 04 |



ஒலிம்பிக்கில் பளுதூக்குதல் போட்டியில் 105 கிலோ எடை பிரிவில் தங்கம் வென்ற ஜேர்மனிய வீரர் மாத்தியாஸ் ஸ்டெய்னர். இவரது மனைவி சுசான் 2007இல் கார் விபத்தில் இறந்தார். அவருக்கு இந்த வெற்றியை அர்ப்பணித்தார் ஸ்டெய்னர். (50)

## தங்கம் மனைவிக்கு அர்ப்பணம்

## 36 உலக சாதனைகள் பீஜிங் ஒலிம்பிக்கில்!

பீஜிங், ஓக.22

பீஜிங்கில் நடைபெற்றுவரும் 28 ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை வரை மொத்தம் 36 உலக சாதனைகள் உட்பட 74 ஒலிம்பிக் சாதனைகள் நிலைநாட்டப்பட்டிருக்கின்றன.

இதனை பீஜிங் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவின் நிறைவேற்றுப் பிரதித் தலைவரும் செயலாளர் நாயகமுமான வாங் வெல் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற - சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி மற்றும் பீஜிங் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழு ஆகியவற்றின் கூட்டு பத்திரிகையாளர் மாநாட்டில் - இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வரை ஒலிம்பிக்கின் 38 பிரிவுகளில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் டென்னிஸ், துப்பாக்கிச் சுடுதல், சைக்கிளோட்டம், படகு வலித்தல், ஜிம்னாஸ்டிக் உட்பட 14 பிரிவுகளுக்கான நிகழ்ச்சிகள் முற்றாகப் பூர்த்தியடைந்துவிட்டன. இதுவரை மொத்தம் 205 தங்கப் பதக்கங்கள், 206 வெள்ளிப் பதக்கங்கள், 232 வெண்கலப் பதக்கங்கள் வெற்றியீட்டியோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

41 நாடுகளைச் சேர்ந்தோர் தங்கம் வென்றுள்ளனர். மொத்தம் 75 நாடுகளுக்கு பதக்கங்கள் கிடைத்துள்ளன - என்று அந்த செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

## பனாமாவுக்கு முதல் தங்கம்

ஒலிம்பிக் போட்டியில் பனாமா முதல் தங்கத்தை வென்றுள்ளத்து. நீளம் பாய்தல் போட்டியில் பங்கேற்ற பனாமா வீரர் இர்வின் சலாடினோ முதலாவதாக வந்து தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்துள்ளார். இவர் 8.34 மீற்றர் தங்கத்தை வென்றார்.

இதன்மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் பனாமா முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது. இதற்கு முன்னர் அந்நாடு 1948 ஒலிம்பிக் போட்டியில் 2 தடகள வெண்கல பதக்கங்களை மட்டுமே வென்றுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரி சென்.ஜோன்ஸை வென்றது நிகேதனும், சவிதனும் அரைச்சதம் கடந்தனர்


நிகேதன் சவிதன்

யாழ்ப்பாணம்,ஒக.22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி 109 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ரி.நிகேதன் 89 ஓட்டங்களையும் சென்.ஜோன்ஸ் வீரர் கவிதன் 68 ஓட்டங்களையும் விளாசினார்கள்.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுகளை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ரி.நிகேதன் பன்னிரண்டு நான்குகளுடன் 78 பந்துகளில் 89 ஓட்டங்களையும் எஸ்.கோமளதரன் ஆறு நான்குகளுடன் 54 பந்துகளில் 48, டி.முரளிவாசன் 24, ஜெசிபன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஜெகன் 10 ஓவர்கள் பந்துவீசி 64 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், ஜஸ்மன் நிசான் 09 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 41 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் எ.சிவகுமாரதாஸ் 10 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் டேவிற்சுதர்சன் 08 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 42 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சிந்தீபன் 03 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஜெயந்தன் 05 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

எஸ்.சவிதன் ஆட்டமிழக்காது பத்து நான்குகளுடன் 68, ஜோய் அனுசன் 80 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட னர்.

நிகேதன் 10 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கோமளதரன் 05 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் முரளிவாசன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் புருசோபன் 09 ஓவர்கள் பந்துவீசி 52 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக.22

தொண்டைமானாறு கலைவாணி முன்பள்ளி, கலைவாணி சிறுவர் கழக விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வெ.பிறேமதாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை முகாமையாளர் பி.கிருஸ்ணானந்தன் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.22

சாந்திகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கைதடி கிழக்கு சிறுவர் வட்டம், சிறுவர் கண்காணிப்புக்குழு ஆகியன இணைந்து நடத்தும் சிறுவர் பாரம்பரிய விளையாட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி கள்ளிநகர் ஜான் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.சிறிநிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

# விக்ரோறியாவை வென்றது யாழ்ப்பாணக் கல்லூரி

வலி.வடக்கு,ஒக.22

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலை கிரிக்கெட் அணிகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தி வரும் சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 55 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியும் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நிகேதன் ஒன்பது நான்குகளுடன் 54, ஸ்ரீகுகன் ஆறு நான்குகளுடன் 31, பிரசோபனன் இரண்டு நான்குகள், ஐந்து இரண்டுகளுடன் 27,கோமளதரன் இரண்டு நான்குகள் ஐந்து இரண்டுகளுடன் 24 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கோபிசாந் 9.2 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 32 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுகளையும்,கோவர்த்தனன் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 31 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், துவாரகன் 09 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

209 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய விக்ரோறியாக் கல்லூரி 36.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 158 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

கபில்நாத் நான்கு நான்குகளுடன் 30, நிரோசன் மூன்று நான்குகளுடன் 18, கோவர்த்தனன் 21, ஓட்டங்களையும் உதிரிகளாக 40 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பிரியலக்சன் 06 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், முரளிவாசன் 08 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், பிரசோபனன் 4.3 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 09 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், நிகிதன் 07 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும்,கோமளதரன் 04 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே இன்று நீர்வேலியில் கயிறு இழுத்தல் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக.22

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி - கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற அணிகளுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அன்றையதினம் ஆண், பெண் உத்தியோகத்தர்களுக்கிடையிலான மெதுவான சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகளும் இடம்பெறும். ஒவ்வொரு உள்ளூராட்சி சபையின் சார்பில் இப்போட்டியில் இரு போட்டியாளர்கள் பங்குபற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கயிறு இழுத்தல் போட்டியில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் உட்பட 13 உள்ளூராட்சி சபை போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆண், பெண் இருபாலாருக்குமான தயிர்ப்பானை உடைத்தல், சாக்கு ஓட்டம், கிடுகு பின்னுதல், வினோத உடை, கயிறு இழுத்தல், மெதுவான சைக்கிள் ஓட்டம் ஆகியவையும் ஆண்களுக்கான ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டம், தலையணைச் சண்டை ஆகிய போட்டிகளும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

# அராலி ஐக்கிய வி.கவின் ஏற்பாட்டில் விளையாட்டு விழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,ஒக.22

அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆண்களுக்கான மென்பந்தாட்டத்தில் அராலி ஐக்கி விளையாட்டுக் கழகமும் சங்கானை பிரதேச செயலகமும் மோதுகின்றன.

பெண்களுக்கான மென்பந்தாட்டத்தில் அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் சங்கானை எம்.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன.

அதைத் தொடர்ந்து கைக்கொடி மாட்டுச்சவாரி 'ஏ', 'பி' என இரு பிரிவுகளாக இடம்பெறும்.

சங்கீதக் கதிரைப் போட்டி ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்தப்படும்.

முதல் நாளான நாளை சனிக்கிழமை மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன. (1)

# மானிப்பாய் பிரதேச சபையை வென்று யாழ்.மாநகர சபை சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஒக.22

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை நடத்திய மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் யாழ்.மாநகர சபை சம்பியனானது.

09 வீரர்கள் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கெண்ட இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மாநகர சபை விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மானிப்பாய் பிரதேச சபை அணியும் மோதிக்கொண்டன.

மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் மிகவும் விறுவிறுப்பான சூழலில் இடம்பெற்ற யாழ்.மாநகர சபை விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது. (1)

# சாரணர்களுக்கு இடையிலான மாகாண மட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக.22

இலங்கை சாரணர் சங்கம் மாகாண மட்டத்தில் நடத்திய மெய்வன்மைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**7-9 வயதுப் பிரிவு**

*75 மீற்றர் ஓட்டம்:* என்.சிந்துஜன்- வட்டு.மத்திய கல்லூரி, கே.சாருஜன்- ஜோன் பொஸ்கோ, பி.சரவணன்- தொல்புரம் விக்னேஸ்வரா.

*நின்று நீளம் பாய்தல்*- பி.சரவணன்- தொல்புரம் விக்னேஸ்வரா, வி.பிரணவன்- ஜோன் பொஸ்கோ, ஆர்.கரன் - சுழிபுரம் ஐக் கிய சங்க சைவ வித்தியாசாலை.

*சமநிலை ஓட்டம்* - ஆர்.ரமணன்- பருத்தித்துறை, ஆர்.ரசிந்தன்-இளவாலை மெய்கண்டான் ஆர்.அருள்தீகான்- பருத்தித்துறை.

*தடை ஓட்டம்:* ஆர்.ரமணன்- பருத்தித்துறை, எஸ்.சாய்குமார் - பருத்தித்துறை, ஆர்.கரன்-சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை.

*பந்து எறிதல்:* கே.சாருஜன்- ஜோன். பொஸ்கோ, ஆர்.ஆர்த்திகன்- கரவெட்டி விக்னேஸ்வரா., எஸ்.அபிகரன்- மகாஜனக் கல்லூரி.

**10 - 11 வயதுப் பிரிவு**

*100 மீற்றர் ஓட்டம்*- கே. சிவகிரிசன்- கரணவாய் மகாவித்தியாலயம், எஸ்.ஏனோக்ராஜ் - ஜோன்.பொஸ்கோ, எஸ்.கோமேதகன் - யாழ்.மத்திய கல்லூரி.

*நின்று நீளம் பாய்தல்:* எஸ். டிலுக்சன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கே. பானுகோபன் - கரணவாய் மகாவித்தியாலயம், பி.மதுசுதன் - பருத்தித்துறை மாவட்டம்.

*பந்து எறிதல்*- ரி.மதுரதீபன்- இளவாலை மெய்கண்டான், எஸ்.கோமேதகன் - யாழ்.மத்திய கல்லூரி, எஸ்.கபிலன்- சங்கானை சிவப்பிரகாசம்.

*சமநிலை ஓட்டம்:* வி.கஜித் இளவாலை மெய்கண்டான், ஏ.ஜெயபிரகாஸ் - கரணவாய் மகா வித்தியாலயம், வி.நிருஜன் - வதிரி மகா வித்தியாலயம்.

*தடை ஓட்டம்:* பி. மதுசன்- பருத்தித்துறை, சி.ஆச்சஸ்- சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம், ரி.மதுரதீபன் - இளவாலை மெய்கண்டான்.

*அஞ்சல் ஓட்டம்:* யாழ்.மத்திய கல்லூரி, கரணவாய் மகா வித்தியாலயம், ஜோன்.பொஸ்கோ.

**12-15 வயதுப் பிரிவு**

*100 மீற்றர் ஓட்டம்:* ஜே. தனுஷன்- யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஆர். நிருஜன் -அளவெட்டி அருணாசலம், ரி. தீபன் - அளவெட்டி அருணாசலம்.

*குண்டு எறிதல்:* எஸ்.தினேஸ் - அருணாசலம் மகாவித்தியாலயம், ஜே. தனுஷன்- புனித அந்தோனியார் கல்லூரி, ஏ. கபிலத்-இருதயக் கல்லூரி.

*நீளம் பாய்தல்* - கே.செந்தூரன்- பருத்தித்துறை, ஜே.தனுஷன்-புனித அந்தோனியார் கல்லூரி, ஆர்.நிருஜன்- அருணாசலம் மகாவித்தியாலயம்.

*400 மீற்றர் ஓட்டம்*- ஆர்.நிரோஜன் அளவெட்டி அருணாசலம், எம்.ஜோர்ஜ் விக்கினேசன் - இளவாலை மெய்கண்டான், ஜே.ஜெசிந்தன்- புனித அந்தோனியார் கல்லூரி.

*தடை ஓட்டம்:* எம்.கெயின்சன்- புனித அந்தோனியார் கல்லூரி, எஸ்.அலன் டிலன் - யாழ்.மத்திய கல்லூரி, எஸ்.கதீஸ்- யாழ். இந்துக் கல்லூரி.

*அஞ்சல் ஓட்டம்:* அளவெட்டி அருணாசலம், புனித அந்தோனியார் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்.

**16-18 வயதுப் பிரிவு**

*200 மீற்றர் ஓட்டம்*- கே.விக்கினேஸ்வரன் - புனித அந்தோனியார் கல்லூரி, வி. அருள்ரூபன் - சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம், எஸ். வசீகரன்- வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி.

*800 மீற்றர் ஓட்டம்:* ஆர்.திவாகர்- யாழ். மத்திய கல்லூரி, ஏ. கரிகலன்- யாழ்.இந்துக் கல்லூரி, ரி.மிரேஸ் - சிதம்பராக் கல்லூரி.

*குண்டு எறிதல்* - வி.ஹரிகரன்- இருதயக் கல்லூரி, வை.ரதிதரன் - காங்கேசன் துறை, எஸ்.வசீகரன் - சிதம்பராக் கல்லூரி.

*நீளம் பாய்தல்* - கே.விக்னேஸ்வரன்- புனித அந்தோனியார் கல்லூரி, ஈ. றொஜீபன் - தெல்லிப்பழை மகாஜன, கே.தனுதன்- அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

*அஞ்சல் ஓட்டம்:* வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி. (1-325)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலக மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக. 22

ஐ.தே.கட்சியின் பட்டியலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடும் மேலக மக்கள் முன்னணியின் வேட்பாளர் ரூபன் பெருமாளின் வாகனத் தொடரணி மீது இரத்தினபுரி, காவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் ஆளுங்கட்சித் தரப்பினர் கடும் தாக்குதல் நடத்தினர் என்று மேலக மக்கள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் ரூபன் பெருமாள், மேலக மக்கள் முன்னணியின் பொகவந்தலாவை அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏ.சவரிநாதன் மற்றும் இரத்தினபுரி மாவட்டப் பொறுப்பாளர் சந்திரகுமார் ஆகியோர் உள்ளிட்ட பிரசாரக் குழுவினர் ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணம் செய்த நான்கு வாகனங்களின் கண்ணாடிகளும் அடித்து நொறுக்கப்பட்டு சேதத்துக் குள்ளாக்கப்பட்டன என்று மேலக மக்கள் முன்னணி தெரிவித் துள்ளது.

காயமடைந்தவர்களில் ஒருவரான ஆசிரியர், தலையில் தாக்கப்பட்ட நிலையில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. இரத்தினபுரி - ஒப தாவத்தைத் தோட்டத்தில் மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கலந்து கொள்ளவிருந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் பங்குபற்ற ரூபன் பெருமாள் தனது ஆதரவாளர்களுடன் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இந்தத் தாக்குதலை ஆளுங்கட்சி வேட்பாளரும், முன்னாள் மாகாண அமைச்சருமான ரஞ்சித் சொய்சா தலைமையிலான குழுவினரே மேற்கொண்டனர் என்று மேலகமக்கள் முன்னணி குற்றம் சாட்டியிருக் கிறது.

இச்சம்பவம் தொடர்பில் காவத்தைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கிறது. (சி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 02.08.1937

மறைவு 24.07.2008

### திருமதி ஈஸ்வரி பரமகுரு

(இளைப்பாறிய ஆசிரியை யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

24.07.2008 வியாழக்கிழமை எமது குடும்பத் தலைவி காலமான செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள், ஒத்தாசை வழங்கியோருக்கும், நோயுற்ற காலத்தில் சிகிச்சையளித்த வைத்தியர்களுக்கும், மலர்வளையங்கள், தொலைபேசி, தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், யா/வட இந்து மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (23.08.2008) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணம் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை. (77586)

குடும்பத்தினர்.

## திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் ஆவணிமாதம் 6 ஆம் நாள் இன்று (22.08.2008) வெள்ளிக்கிழமை காலை 09.16 மணி முதல் 10.34 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும், சஷ்டி அமிர்தசித்தயோகமும், சுகலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

திரு.திருமதி தர்மராசா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **கங்கேஸ்வரன்** அவர்களுக்கும்



திரு.திருமதி குணசிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி **சுபாசினி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு "திவ்விய ஜீவன சங்கம் சட்டநாதர் கோயிலடி நல்லூர் திருமண மண்டபத்தில்" திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்து பசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திரு.திருமதி தர்மராஜா மல்லிகாதேவி
இல, 280, ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

திரு.திருமதி குணசிங்கம் அஞ்சலாதேவி
இல.028, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு).

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

16 ஆம் மாதம்



மண்ணில் 22 . 07 . 1924

உதிர்வு 21.04.2007

திருமதி
**சின்னப்பா தெய்வானை**

முதலாம் ஆண்டு



மண்ணில் 12 . 03 . 1943

உதிர்வு 02.09.2007

அமரர் கனகரத்தினம்
**மகாலிங்கம்**

(முன்னாள் சிறாப்பர், சுங்கத் திணைக்களம்)

எம் தவப்பயனாய் தாயாய் தலைவனாய் தரணியில் எம் உறவாகிய தங்கள் நினைவுகளுடன் ......

சி.குணரத்தினம்,
கண்டி வீதி, சாவகச்சேரி. (77332)

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 11.12.1971

மறைவு 22.07.2008

### செல்வன் ஞானேந்திரம் பார்த்தீபன்

வெள்ளையுள்ளம் படைத்த எமது
அன்புப் பார்த்தீபா!
கொள்ளையடித்துச் சென்றானோ காலன்
உனது இன்னுயிரை?
காடையர் செய்த காரியத்தால்
உன் உடலைத்தான் எரிக்க முடிந்தது
எமது உள்ளத்தில்
நீறுபூத்த நெருப்பாக இருக்கும்
உனது நினைவை எரிக்க முடியுமா?
சிரித்த முகத்துடன் வரும் உனதுருவம்
எம் உள்ளத்தில் மறையாதடா!
மென்மையான உனது இனிய குரல்
காதுகளில் கேட்கிறதே!
நீ ஏனடா எம்மைப் பிரிந்தாய்?
உன் அழகிய முகம் கருகியதேனோ?
ஒருமுறை எம்முன் ஓடிவந்து உன்
திருமுகம் காட்டாயோ பார்த்தீபா!

உன் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை
வேண்டுகிறோம்.

இன்று (22.08.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச் செய்திகேட்டு எமது துயரில் பங்குகொண்டவர்க்கும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் நேரில் வந்தும், அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் மற்றும் பல உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது காலத்தால் அழியாத நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

'கற்பகவில்லா',
மீசாலை வடக்கு, வேம்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்தை நிலைநாட்ட கண்ணனின் கிருஷ்ணாவதாரம்



உலகில் அதர்மங்கள் மேலோங்கி, தர்மங்கள் அழிந்து போக நேர்ந்த வேளையில் நல்லோரைக் காக்கவும் தீயவரைத் தண்டிக்கவும் அழிக்கவுமென திருமாலானவர் காலத்துக்குக் காலம் அவதாரங்கள் எடுத்துள்ளார். திருமாலானவர் எடுத்த ஒன்பதாவது அவதாரமே ஸ்ரீகிருஷ்ணாவதாரமாகும்.

துவாபர யுகத்திலே வடமதுரையை ஆண்ட உக்கிரசேனன் என்ற மன்னனின் மகன் கம்சன். இவன் தீய குணமே உருவானவன்.

கம்சன், தந்தை உக்கிரசேனனை சிறையிலடைத்துவிட்டுத் தானே மகுடம் சூட்டி கொடுங்கோல் ஆட்சி செய்து வந்தான். இவனது ஆட்சியில் மக்கள் துன்புறுத்தல்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளானார்கள்.

உடன்பிறந்த சகோதரி தேவகி, திருமணப் பருவம் அடைந்தபோது தேவகியை வசுதேவருக்கு மணம் முடித்து வைத் தான் கம்சன். அவன் அவள்மீது அளவற்ற பாசம் கொண்டிருந்தான்.

திருமணம் முடிந்து தம்பதியரைத் தேரிலேற்றி கம்சன் அழைத்துச் சென்றுகொண்டிருந்தவேளை, வானத்திலிருந்து ஓர் அசரீரி கேட்டது.

"கம்சா! உன் தங்கை தேவகிக்குப் பிறக்கப்போகும் எட்டாவது பிள்ளையால் நீ கொல்லப் படப் போகிறாய்," என்றது அந்த அசரீரிக் குரல்.

பதறிப்போன கம்சன் உடனே தன் உடைவாளால் தனது தங்கை தேவகியைக் கொல்லப் போனான். அருகில் இருந்த வசுதேவர் நடுங்கியபடியே "மைத்துனரே! இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளை உன்னிடத்தில் ஒப்படைத்து விடுகிறேன். இவளைக் கொல்லாதே! பெண்களைக் கொல்வது பாவமல்லவா." என மனமுருகி வேண்டினார்.

சிறிது மனம் இளகிய கம்சன் தேவகியைக் கொல்லாமல் சகோதரி தேவகியையும் மைத்துனர் வசுதேவரையும் சிறையில் அடைத்து வைத்தான்.

சிறையிலே தேவகி பெற்றெடுத்த ஏழு குழந்தைகளும் ஒன்றன் பின் ஒன்றாக கம்சனின் வாளுக்கு இரையாகிப்போயினர். அனைத்து உயிர்களையும் கட்டிக் காத்து அருள் புரியும் திருமால், தேவகியின் கருவில் எட்டாவது குழந்தையாக உருவானார். கம்சன் கேட்ட அசரீரி பலிக்கும் காலமும் நெருங்கியது.

ஆவணிமாதம் கிருஷ்ண பக்ஷத்து அட்டமித் திதியுடன் ரோகிணி நட்சத்திரத்தில் விருஷ இலக்கினத்தில் நள்ளிரவு நேரத்தில் தேவகி கண்ணனைப் பெற்றெடுத்தாள். அந்த ஒரு விநாடியில் பூலோகமெங்கும் பேரொளி பரவி மக்கள் மனதில் ஓர் ஆனந்தமான உணர்வு உருவானது.

சங்கு சக்கரதாரியாகப் பிறந்த கண்ணனைக் கண்டு வசுதேவரும் தேவகியும் ஆனந்தத்தில் திளைத்தனர். அந்த நள்ளிரவில் கண்ணன் பிறந்ததை சிறைச்சாலையில் உடனே எவரும் அறிய வில்லை.

கம்சன் இந்தக் குழந்தை பிறந்ததை அறிந்தால் அதனையும் கொன்று விடுவான் என எண்ணி வசுதேவரும் தேவகியும் கலங்கினர்.

பிறந்த உடனேயே அந்தத் தெய்வக் குழந்தை பேச ஆரம்பித்தது. "என்னைக் கொண்டு போய் கோகுலத்தில் விட்டுவிட்டு, அங்கே யசோதைக்குப் பிறந்துள்ள பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு இங்கு வந்துவிடுங்கள்" என வசுதேவருக்கு அக்குழந்தை கட்டளையிட்டது. மழை பொழிந்து கொண்டிருந்த அந்த நடுநிசியில், குழந்தையைச் சிறு கூடையொன்றினுள் வைத்து எடுத்துச்செல்ல வசுதேவர் புறப்பட்டபோது சிறைக்கதவுகள் தாமாகவே திறந்து வழிவிட்டன. ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷன் குழந்தை மழையில் நனையாமல் குடைபிடித்தான்.

வசுதேவருக்கு யமுனை நதி வழி விட்டுக் கொடுக்க குழந்தை கண்ணனுடன் அவர் நந்தகோபனின் வீட்டைச் சென்றடைந்தார். நந்தகோபனின் இல்லத்தில் அதற்குச் சற்று நேரத்திற்கு முன்னர் தான் யசோதைக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்திருந்தது. யசோதை தனக்கு என்ன குழந்தை பிறந்திருக்கிறது என்பதைக் கூட அறியாமல் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். வசுதேவர் தாம் கொண்டு சென்ற ஆண் குழந்தையை யசோதையின் அருகே கிடத்திவிட்டு,

## ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி

அவளுக்குப் பிறந்த பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு யாரும் அறியா வண்ணம் அங்கிருந்து புறப்பட்டு வந்த வழியே சிறைச் சாலைக்குத் திரும்பினார்.

கொண்டுவந்த பெண் குழந்தையைத் தேவகியிடம் கொடுத்தார்.

குழந்தையும் வீரிட்டு அழ ஆரம்பித்தது. விழித்துக் கொண்ட சிறைக் காவலர்கள் கம்சனிடம் ஓடிச்சென்று குழந்தை பிறந்ததைக் கூறினார்கள்.

எட்டாவது குழந்தை அல்லவா? ஆவேசமாக சிறைச்சாலைக்கு வந்த கம்சனைக்கண்டு தேவகி நடுங்கியபடியே "அண்ணா, இப்போது எனக்குப் பிறந்திருப்பது பெண் குழந்தை தானே! ஆண் குழந்தையாற்றானே தங்களுக்கு ஆபத்து நேரும், ஆகையால் இவளை ஒன்றும் செய்யாதீர்" என்று கெஞ்சினாள்.

தேவகியின் வேண்டுதலைப் புறக்கணித்த கம்சன், குழந்தையின் கால்களைப் பிடித்துத் தூக்கி சிறைச் சாலைச் சுவரிலே மோதிக் குழந்தையைச் சாகடிக்க எண்ணி வீசினான்.

என்ன ஆச்சரியம்!! அவன் தூக்கி வீசிய மறுகணமே அக்குழந்தை கம்சனின் தோள்களை உதைத்து உயரப் பறந்து அந்தரத்திலே போய் நின்றது. கம்சனைப் பார்த்து "ஆணவம் கொண்ட அரக்கனே, உன்னைக் கொல்லப் போகிறவன், வேறு ஓரிடத்தில் இருக்கிறான். அவனால் நீ மரணிக்கப் போவது உறுதி, இவர்களை விடுதலை செய்து விடு. நான் யோகமாயை. என்னை உன்னால் கொல்லமுடியாது" என்று கூறி மறைந்துவிட்டது. நடுங்கிப் போனான் கம்சன். என்னைக் கொல்ல ஒருவன் வேறு எங்கோ பிறந்துள்ளானா? புரியவில்லையே! என்று புலம்பினான்.

தேவகிக்கு ஏழாவது கருவாக வயிற்றில் யோகமாயை என்னும் துர்க்காதேவி இருந்து சில. மாதங்களின் பின் கருவழிந்து, யசோதையின் வயிற்றில் புகுந்து பெண் குழந்தையாகப் பிறந்து வசுதேவர் மூலம் இங்கு வந்து மறைந்ததை மூடக் கம்சனால் எப்படி உணரமுடியும்.

சிறையிலே இருந்த வசுதேவரிடமும் தேவகியிடமும் மன்னிப்புக் கேட்ட கம்சன், அவர்களை சிறையிலிருந்தும் விடுதலை செய்தான்.

சில துன்மந்திரிகளின் ஆலோசனைப்படியே கம்சன் அன்றைய தினம் நாட்டிலே பிறந்துள்ள அனைத்துக் குழந்தைகளையும் கொன்று விடும்படி தன் ஏவலர்களுக்குக் கட்டளையிட்டான். நாலாதிசைகளிலும் சென்ற கொடிய காவலர்கள் அன்று பிறந்திருந்த சகல குழந்தைகளை யும் கொன்றுவிட்டனர்.

கோகுலத்தில் யசோதையின் அருகே குழந்தை கண்ணனை விட்டுவிட்டுச் சென்ற சிறிது நேரத்திலேயே அங்கே சூழ்ந்திருந்த மாயை அகன்றது. யசோதை தன்னருகில் இருந்த மழலையை எடுத்து மார்போடு அணைத்து மகிழ்ந்தாள். பொழுது விடிந்ததும் நந்தகோபருக்கும் யசோதைக்கு ஆண்மகவு பிறந்த சேதி கோகுலமெங்கும் பரவியதால், கோகுலமே விழாக் கோலம் பூண்டது.

கண்ணன் பிறந்ததைக் கோகுலத்து மக்களெல்லாம் பெருமகிழ்வுடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

கிருஷ்ணாவதாரத்தின் சிறப்பே கண்ணனின் குறும்புத்தனமும் துடுக்குத்தனமும் தான்.

மகாபாரதப் போரிலே கண்ணன் கீதை என்னும் மானுட நீதி தர்மத்தைப் போதித்து, நல்லவர்களுக்கு நல்லவனாகவும் நண்பனாகவும், தீயவர்களுக்கும் தீமைகளுக்கும் எதிரியாகவும் நின்று வழிநடத்தி நீதியை நிலைநாட்டினான்.

எங்கேதர்மம் குறைவடைந்து அதர்மம் தலைதூக்கியாடுகிறதோ அங்கே நீதியை நிலைநாட்டி தர்மத்தைக்காக்க நான் அவதாரம் செய்வேன் என்று கண்ணன்கூறினான்.

கண்ணன் பெருமைகள் காலத்தால் அழியாதவை. நாமும் கீதையில் கண்ணன் கூறி வைத்தவைகளை மனதில் கொண்டு நீதி வழி நடந்து நல்லவைகள் செய்து நல்லவர்களாக வாழ்வோம்!

*பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு,*
பிரதமகுரு, வடமராட்சி ஸ்ரீவல்லிபுரக் கோயில்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று செல்வி தாரணி ரஞ்சனின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா, மிருதங்கம் வி.ரமணா.

* * *

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந்திருவிழா காலங்களில் நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை 'வாழ்க்கையில் சமயம்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மாவின் சொற்பொழிவு இடம்பெறும்.

அச்செழு சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை [illegible] அறநெறிப் பாடசாலை அதியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203)






# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



*புன்னுனிமேல் நீர்போல் நிலையாத பொய்யுடலை*
*என்னினிநீர் எண்ணி வருந்துவீர் - மண்ணுலகில்*
*ஆறுமுகன் பாதத்தை யன்பா யிலங்கையீர்*
*கூறு மதுவே குணம்.*

- யோகர் சுவாமிகள்.

## தேவனே தமிழர் எம்மைக் காப்பாயே!

மூவர் புரமெரித்த முக்கட் சிவன் பயந்த
முகமா றுடைய கந்தப் பெருமானே
மாவின் பழங்கேட்டு மாமயி லேறி இந்த
மாநிலஞ் சுற்றி வந்த முருகோனே
நாவற் பழங்கொடுத்து ஔவை தமிழ் கேட்ட
நற்றமிழ்க் குமரா நல்லூர் அமர்ந்தோனே
தேவர் குலங்காக்கத் திருவவ தாரஞ் செய்த
தேவனே தமிழர் எம்மைக் காப்பாயே.

- மட்டுவில் நல்லதம்பி.

## கந்தா நீ வரவேண்டும்!

நல்லை நகர் மீது குடிகொண்ட கந்தா
தினமும் துன்ப வெள்ளத்தில் வாடுகிறோம்
இத்துயர்தனைப் போக்க சண்முகா நீ வரவேண்டு!
சூரனை வதைத்து வெற்றிகொண்ட குமரா
தினம்தினம் வறுமையில் வாடுகிறோம்
இத்துயர்தனைப் போக்க கடம்பா நீ வரவேண்டும்!
தர்மம் அழிந்து அதர்மம் முளைவிடுகிறதே
இத்துயர் போக்க கதிர்வேலா நீ வரவேண்டும்.

- மு.ஆ.சுமன், வல்வெட்டித்துறை.

## நெஞ்சில் தினமும் நினை

*தொல்லையெலாம் நீங்கச் சுகமோங்கச் சோதரராய்*
*எல்லோரும் இன்புற் றிருந்திடவே - நல்லையிலே*
*குஞ்சரியோ டாடும் குமரேசன் பொற்பதத்தை*
*நெஞ்சில் தினமும் நினை*

*பஞ்சம் பசிநீங்கப் பாரோர்கள் மேலோங்கத்*
*தஞ்சமென நல்லைத் தலத்தினிலே - அஞ்சுகரக்*
*குஞ்சரற்குப் பின்பிறந்த கூர்வேலன் பொற்பதத்தை*
*நெஞ்சில் தினமும் நினை*

*எண்ணியவை கைகூட எல்லோரும் ஈடேற*
*மண்ணில் இமையவர்போல் வாழ்வுபெற எண்ணுவையேல்*
*அஞ்சலென நல்லையிலே ஆளும் குகன்பதத்தை*
*நெஞ்சில் தினமும் நினை.*

*-வ.சின்னப்பா, தனங்கிளப்பு.*

## வேலனே வந்துவிடு!

தினம் எமை காத்திட
படி இறங்கி வந்திடு
மனம் உனை துதித்திட
மயில் ஏறி வந்திடு

யாழ் மீட்டிப் பாடிய
யாழ்பாணர் துயர் நீக்க
வேல் தூக்கி
வேகமாய் வந்திடு!

-எஸ்.ரி.பிரகாஸ், *மானிப்பாய்.*

## பன்னிரு வேலன் அங்கே சிரித்து நின்றான்

கற்கண்டு தமிழ்ச் சொல்லில்
கவி புனைந்து
நல்லைக் கந்தா! உன் கழலடியைப்
பாடி நின்றேன்
சொற்பதமும் பொருள்பதமும்
சுவையைக் கூட்ட
சுந்தரத்தான் திருமுகத்தைக்
காணவேண்டி
பற்றை விட்டுப் பற்று வைத்துப்
பரனே! என்றேன்
பன்னிருகை வேலன் அங்கே
சிரித்து நின்றான்!

- தேவி கணேஸ், *யாழ்ப்பாணம்.*

## நல்லூரில் சும்மா இரு

*'நானென்ற அகந்தையோ' நல்லூரில் போய்விடும்*
*நம்பிக்கையோடு நீ வீதி வலம் வந்து இரு!*
*ஏனென்ற வார்த்தைக்கு யோகர் சுவாமிகள்*
*எமக்கியம்பிய வார்த்தை "சும்மா இரு!"*

*தான் என்ற வார்த்தைக்குச் சொந்தம் அங்கில்லை*
*தடுமாறு செய்பவர்க்கு வாய்ப்பு அங்கில்லை*
*கோனாக அரசாளும் கோபுர முருகா! நீ*
*கோல வீதி வரும்போது நின்னழகே அழகு!*

கே.எஸ்.சிவஞானராஜா, *கொக்குவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளவத்தை தமிழ்ச்சங்கத்தில் கடந்த 10.08.2008 ஞாயிறு அன்று நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவின் போது நகைச்சுவை வேந்து இ.சிறீஸ்கந்தராஜாவால் நகைச்சுவை அமிர்தம் என்ற நூல் வெளியிடப்பட்டது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திருவாளர் Dr.ஆ.கங்காதரனி (சட்டத்தரணி) அவர்களுக்கு பொலிஸ் அத்தியட்சகர் திரு.அரசரத்தினம் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அத்துடன் நூலின் முதல் பிரதியை பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்.

(சி/554243)

# பிறந்த நாள் வாழ்த்து




அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு.திருமதி நிலாவண்ணன்-வனிதா** தம்பதிகளின் செல்வப் புதல்வி **நித்திலா** தனது 8 ஆவது பிறந்தநாளையும் செல்வப் புதல்வன் **அருணன்** தனது 4 ஆவது பிறந்தநாளையும் இன்று வெள்ளிக்கிழமை(22.08.2008) அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்கள்.

அவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, பெரியப்பா, பெரியம்மா, அத்தை, மாமா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றார்கள்.

மா. சிவமூர்த்தி மஞ்சுளாரஜனி(மாமா குடும்பம்).
*வீடியோ கலர்மினி-அச்சுவேலி.*

(சி/554240)

# ஈராண்டு நினைவஞ்சலி



உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட

## அமரர் கந்தையா கனேசலிங்கம்

மலர்வு: 13.12.1972 உதிர்வு: 22.08.2006

எங்கள் அன்பே வடிவான செல்வமே!
உன் புன்சிரிப்பு எங்கே! உன் அழகிய வதனம்
எங்கே! உன் புத்திக் கூர்மை எங்கே! எங்கள்
வீட்டுக்கு முதலில் மருமகனாக வந்த முத்தே
நாங்கள் இனி எப்போ காண்போம் எங்கே தேடுவோம்
பிரிவு எவ்வளவு கொடுமையானது நீ உன் மனைவி
பிள்ளைகளைப் பிரிந்து பட்ட துன்பம் கொஞ்சமில்லையடா
நீ மனம்மாறி திருந்தி வர ஆண்டவன்
உன்னைப் பறித்து விட்டானையா.

உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உன் பிரிவில்* **மனைவி: ஜீவியாமோரிஸ்,**
*பிள்ளைகள்:* **யானுஷா, கயல்விழி,**
*சகோதரர்கள்:* **கைலாசம் போகரா, மலர், கவிதா, ஜெகதீஸ்வரன்,**
*தாய்:* **கந்தையா இராசம்மா,**
*மைத்துனர்மார்:* **சிறி, கனி, சுதா,**
*மாமியார்:* **பொனிபாஸ் சிவரத்தினம்.**

பொனிபாஸ் மரியகோரற்றி.
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(773531)

### சுகாதாரத் தொண்டருக்கு உலர் உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஓக.22

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பணியாற்றும் சுகாதார தொண்டர்களுக்கான ஓகஸ்ட் மாத உலர் உணவுப் பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து விநியோகிக்கப்பட்டன.

உலக உணவுத் திட்ட நிறுவனத்தினா் சுகாதாரத் தொண்டர்களுக்கு மாதாந்தம் உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(203-207)

உ

## நல்லூர் சைவமகாசபை நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை

இடம்: நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்
விடயம்: ''கந்தபுராணம்''
இன்று (22.08.2008) வெள்ளி ஆரம்பம்
நிகழ்த்துபவர்: ''கானகதாவாரிதி''
பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா
தினமும் மாலை 5.30 மணிக்கு
சிறந்த பக்கவாத்திய சகிதம் நடைபெறும்.
**ஷ நல்லூர் சைவமகாசபை.**

(77370)

விளம்பர அன்பளிப்பு:
**சஞ்சீவி சங்குசக்கரம் பெயின்ற் ஹவுஸ், பரமேஸ்வரா சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

### சிறுவர் அரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

வடமராட்சி, ஓக.22

வடமராட்சிவலய பாடசாலைகளுக்கிடையே பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் அரங்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகள் விவரம் வருமாறு:

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

(203-236)

## முதலாம் ஆண்டு நினைவுமலர்



## சுந்தரம் காளிராசா

*முன்னாள் மின்னியலாளர்* C.T.B

மலர்வு 25.06.1942 உதிர்வு 02.09.2007

எங்கள் அன்புத் தெய்வமே
எம்மைவிட்டு நீங்கள் பிரிந்து ஓராண்டு சென்றதப்பா!
உங்கள் நினைவு எம்மை விட்டுப் பிரிய மறுக்குதப்பா!
மறு பிறவியென்பது மானிட வாழ்வில்
உண்மையென்றால்
மறுபடியும் பிறந்திடுவீர் எங்களுடன்

உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டி நிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

கொழும்பு - 06 (சி/554237)


# Higher National Certificate in Computing

(Software Development)

**Obtain a World Class British Qualification**

*Delivered locally.........*
*Recognized globally......*

edexcel INTERNATIONAL

H N C

**New batch starts on 14.09.2008 at 10 am**

Edexcel International நிறுவனத்தின் சர்வதேச தரம் வாய்ந்த HNC in (Software Development) கற்கை நெறியானது IIS City Campus நிறுவனத்தினால் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வருட காலப்பகுதியை கொண்ட இக்கற்கை நெறியை மாணவர்கள் பூர்த்தி செய்வதனுடாக இங்கிலாந்து அவுஸ்ரேலியா கனடா அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள முன்னனிப் பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில் நுட்பத்தில் or கணனி விஞ்ஞானத்தில் பட்டக்கல்வியினை மேற்கொள்வதற்கு நேரடியாக 2ம் வருடத்தில் இணைந்து கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் வெளிநாட்டு உயர் கல்விக்கான Visa (Student Visa) பெற்றுக்கொள்வதிலும் சர்வதேச வேலைவாய்ப்புச்சந்தையில் HNC மாணவர்களுக்கு அதிக வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுக்கின்றது.



B.Sc.(Hons) — 1 Year at leading Universities in UK,USA,Australia,Canada etc — 3rd Year
BTEC HND — Computing (General) / Computing (ICT System Support) Computing (Software Development) — 2nd Year
BTEC HNC — Computing (Software Development) — 1st Year
G.C.E A/L with 2 Subjects

**Units Offered**

| Duration | 1 Year (2 Semester) |
|---|---|
| Computer Platforms | |
| Systems Analysis | |
| Programming concepts | |
| Database Design Concepts | |
| Software Development Project | |
| Data Structure and algorithms | |
| Visual Programming | |
| MS Office Solution Development | |
| Website Design | |
| OOP Programming | |
| Software Testing | |

IIS CITY CAMPUS
#200,Stvan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk
Web: iiscitycampus.net


# மரண அறிவித்தல்

## திருமதி லலிஸ்லாலினி பொய்யாமொழி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லலிஸ்லாலினி (நிலா) 12.08.2008 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்துரை- மனோன்மணி (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகளும் கிருஷ்ணபிள்ளை- இராசம்மா (சண்டிலிப்பாய்) தம்பதியரின் அன்பு மருமகளும் பொய்யாமொழி (அருள்- பிரான்ஸ்)யின் பாசமிகு மனைவியும் அருசாந்தின் (பிரான்ஸ்) பாசமிகு தாயும் திருமதி வாசுகிதேவி சற்குணம், திருமதி தயாபரதேவி, தயாளகுமார், ஜெயக்குமார் (பிரான்ஸ்), திருமதி தமயந்தி தர்மராஜா, திருமதி மலர்விழி கணேசராசா, திருமதி வளர்மதி புஸ்பராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி சகாயதேவி ஜெயக்குமார் (பிரான்ஸ்), சியாமளா (ஜேர்மனி), பிரான்சைச் சேர்ந்தவர்களான செல்வபாஸ்கரன், விஜயபாஸ்கரன், சுரேஸ்லால்,யசோதா, றோசனா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2008) சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*திரு.வி.கிருஸ்ணபிள்ளை (மாமா).*

*கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.*

(77359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தீர்க்கமான கட்டத்தில் தேர்தல்

வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணசபைகளுக்கு நாளை நடக்கப்போகும் தேர்தல், வெறும் பிரதேச மட்டப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாக்களிப்பு மட்டும் அல்ல: அதற்கும் அப்பால் தேசிய மட்டத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அது விளங்குகின்றது.

தமிழர் தாயகம் மீது தமது அரசு தொடுத்திருக்கும் கொடூரப் போருக்கு தென்னிலங்கைச் சிங்களத்திடம் அங்கீகாரம் பெறும் தேர்தலாக நாட்டினதும் அரசினதும் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தலை முன்நிறுத்தியிருக்கின்றார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஏதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவோ பட்டினியில்லாத வாழ்க்கைத் தரமும் சமரசமும் நிலைநிறுத்தப்படுவதற்கு மக்களின் அனுமதியைக் கோரும் வாக்களிப்பாக இதனை வெளிப்படுத்தி வருகின்றார்.

தென்னிலங்கைச் சிங்களம் இதில் எதனைத் தெரிவு செய்யப்போகின்றது என்பது பெரும்பாலும் நாளை மறுதினம் தெளிவாகிவிடும்.

பொதுவில் பார்த்தால் 2001 டிசெம்பரில் இடம்பெற்ற பொதுத் தேர்தலை ஒட்டியது போன்ற கருத்து நிலைப்பாடுகள் அரசுத் தரப்பாலும் பிரதான எதிர்க்கட்சித் தரப்பினாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆனாலும் அன்றைய நிலைமை வேறு; இன்றைய நிலைமை வேறு.

2001 டிசெம்பர் தேர்தலுக்கு அறிவிக்கப்பட்டபோது அப்போதைய சந்திரிகா அரசு அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நின்றது. 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற சந்திரிகாவின் விபரீத - விநோத - கோட்பாடு, புலிகள் இயக்கத்தின் போரியல் வலுவினால் தவிடுபொடியாக்கப்பட்டிருந்தது. இராணுவ அணுகுமுறையைப் பயன்படுத்தி உப்புச்சப்பற்ற ஓர் அரைகுறை அரசியல் தீர்வை தமிழ்மக்கள் மீது வல்வந்தமாகத் திணித்து விடலாம் என்ற சிங்கள மேலாண்மைவாதிகளின் கற்பனைக் கோட்டை இடிந்து, தகர்ந்து போயிருந்த காலம் அது. வன்னிப் பெரும் சமர்களில் அச்சமயம் புலிகள் ஈட்டிய திகைப்பூட்டும் வெற்றிகளும், சாதனைகளும் இராணுவத்தின் முதுகெலும்பை முறித்து தென்னிலங்கையை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்த சமயம் அது. சுதந்திர இலங்கையின் வரலாற்றில் தமிழர் மீதான இராணுவ மேலாதிக்க வலிமையை தென்னிலங்கை இழந்திருந்ததோடு, ஆனையிறவுக் கூட்டுப்படை முகாம் முதல் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் வரை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்கள் பல புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் தகர்ந்ததன் விளைவாக இலங்கையின் பொருளாதாரமே அதலபாதாளத்தில் வீழ்ந்து ஒரேயடியாகப் படுத்த காலகட்டம் அது.

சமாதானம், போர் என்ற இரு முரண்பட்ட துருவங்களில் மக்களின் கருத்தை ஈர்த்த அந்நிலைமையில் சமாதானத்தை வேண்டி நிற்கின்ற சக்திகளுக்கும் சமாதானத்திற்கு எதிரான தீவிரவாத சக்திகளுக்கும் இடையிலான போட்டியாக அந்தத் தேர்தல் நடந்தது. அதில் சமாதான ஆதரவு சக்திகள் வெற்றியீட்டின.

ஆனால் தமது போர் வெறிப் போக்கால் தமக்கு ஏற்பட்ட இழப்புகள், பாதிப்புகள், பின்னடைவுகள் பற்றிய பட்டறிவை இரண்டரை ஆண்டுகளுக்குள் மறந்துவிட்ட தென்னிலங்கை, அதனால் மீண்டும் அடுத்த பொதுத் தேர்தலில் போர்விரும்பிகளை - யுத்தவெறி கொண்டவர்களை - ஆட்சியில் அமர்த்தியது.

இப்போதும் ஒருபுறம் யுத்தம், மறுபுறம் பட்டினியில்லாத வாழ்வு மற்றும் சமரசம் என்ற கோரிக்கைகளோடு மாகாணசபைத் தேர்தல் அரங்கேறுகிறது.

ஆனால் 2001 தேர்தல் சமயத்தில் இருந்தமை போன்று இன்று தென்னிலங்கை மனநிலை இல்லை. அது தலைகீழாக மாறியுள்ளது.

அன்று சந்திரிகாவின் 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற விபரீதக் கோட்பாடு தோல்வி கண்டிருந்த நிலைமை. ஆனால் இன்றோ 'மனிதாபிமானத்தை நிலைநிறுத்துவதற்கான யுத்தம்' என்ற மஹிந்தரின் விநோதக் கோட்பாடு வெற்றிபெறும் என்று தென்னிலங்கை நம்பும் நிலைமை.

அன்று சந்திரிகா அரசு இராணுவ அதிர்ச்சித் தோல்விகளைச் சந்தித்து அதன் படைப்பல மனோவலிமை வீழ்ச்சி கண்டிருந்த நிலை. ஆனால் இன்றோ, அரச படைகள் பெரு வெற்றிகளை ஈட்டியதாகச் செய்யப்படும் பிரசாரத் தந்திரோபாயத்தில் தென்னிலங்கை எடுபட்டு, இராணுவ ரீதியிலான இறுதி வெற்றியும், தீர்வும் கைக்குக் கிட்டும் தூரத்தில் உள்ளன என்று ஒரேயடியாக நம்பும் அளவுக்குப் படைப்பல வலிமை மேம்பாடு கண்டுள்ளது. தாம் பிச்சையாகப் போடும் 'எச்சில் இலை'த் திட்டத்தைத் தீர்வாக ஏற்பதைத் தவிர, தீர்வு குறித்துப் பேரம் பேசும் வலிமையே தமிழினத்துக்கு இல்லை எனக் கொழும்பு அரசு சிந்திக்கத் தலைப்படும் கட்டம்.

இந்தப் பின்புலத்திலேயே யுத்தத்தைத் தீவிரப்படுத்த தென்னிலங்கையிடம் அங்கீகாரம் கோரும் வாக்களிப்பாக இத்தேர்தலை ஜனாதிபதி முன்நிறுத்துகின்றார்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமரசத் தீர்வுக்கான அங்கீகாரத்தைத் தமக்கு வழங்குங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் கோருகின்றார்.

மக்கள் தீர்மானம் எந்தப் பக்கம் என்பதை நாளை மறுதினம் தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தலாம் என நம்பலாம்.

# வழுக்கையாற்றை ஆழமாக்கும் திட்டம்; அராலி அணைகட்டு அமைக்கும்பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.22

குடாநாட்டில் பாரிய திட்டங்களில் ஒன்றான வழுக்கையாற்றை ஆழமாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக அராலியில் அணைக்கட்டுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பாக வலிகாமம் மக்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. மறுநாள் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் 268 மில்லியன் செலவில் வழுக்கையாற்றை புனரமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன.

வழுக்கையாற்றுத் திட்டத்தால் ஒரு பிரதான வாய்க்கால், 8 கிளை வாய்க்கால்கள், 62 குளங்கள் என்பன புனரமைப்புச்செய்யப்படவுள்ளன.

வழுக்கையாற்று 1948 ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டளவில் மாகாண நீர்பாசனத் திணைக்களம் பொறுப்பேற்ற போதிலும் நிதிப் பற்றாக்குறையால் பராமரிப்பு வேலைகளில் தடங்கல்கள் ஏற்பட்டிருந்தது.

கடந்த 15 ஆம் திகதி அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் அராலியில் அணைக்கட்டுகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் பகுதி விவசாயிகளுக்கு இது ஒருவரப்பிரதாசமாக அமையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203)

## கப்பலில் தவறவிடப்படும் பொருள்கள் அரச உடைமையாகும் நிலை

### தவிர்க்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்து

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்குக் கப்பல் மூலம் பயணம் செய்யும்போது பொதுமக்களால் தவறவிடப்படும் பொருள்களை உரிய அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளாவிட்டால் அவை அரச உடைமை ஆக்கப்படும் என்று மல்லாகம் நீதி மன்றம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறைக்குக் கப்பல் மூலம் பயணம் செய்யும் பொதுமக்களால் பெறுமதியான பொருள்கள் கைவிடப் படுகின்றன. இவற்றைப் தெல்லிப் பழை பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைத்து வருகின்றனர்.

இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றத்தால் கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும் அவை உரியவர்களால் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே உரிய காலத்தில் உரியவர்களால் இனங்காணப்பட்டு உடைமைகள் பெறப்படாதவிடத்து அவை அரச உடைமையாக்கப்படும் என்று நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

கப்பலில் பயணம் செய்வோருக்கு ஏற்படும் வாந்தி, உபாதை காரணமாகவே பொருள்கள் தவறவிடப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. (203)

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஓக.22

இளம் குடும்பஸ்தர் வீட்டு உதரத்தில் கயிற்றில் தொங்கியபடி சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நாவற்குழி தெற்கில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்மதாஸ் (வயது 32) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது மரணம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினார்.

யாழ். சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (203-207)

## தேசநிர்மாண அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பருத்தித்துறையில் 6 அபிவிருத்தித் திட்டங்கள்

வடமராட்சி, ஓக.22

தேசநிர்மாண மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் 6 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் தெரிவித்தார்.

இத் திட்டங்களுக்கென தேசநிர்மாண மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு 7.1 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் 4 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபா செலவில் மின் பிறப்பாக்கி அறையும், 9 லட்சத்து 85 ஆயிரம் ரூபா செலவில் கிளினிக் மண்டபமும், 19 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் பிரசவ விடுதியில் வெளி நோயாளர் பிரிவிற்கான பாதையும் மற்றும் சுற்றுமதிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இதே வைத்தியசாலையில் 98 ஆயிரத்து 500 ஆயிரம் ரூபா செலவில் மின்பிறப்பாக்கித் தொகுதி இணைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தகத்திற்கு 14லட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபா செலவில் சுற்று மதிலும், தண்ணீர்த் தாங்கியும் அமைக்கப்பட்டுள்ளன.

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 19 லட்சத்து70 ஆயிரம் ரூபா செலவில் களஞ்சிய அறையும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன - என்று கூறப்பட்டது. (203-236)

## தமிழ்க் குடும்பஸ்தர் நீர்கொழும்பில் கடத்தல்

கொழும்பு, ஓக. 22

நீர்கொழும்பு, மாரவிலப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் 31 வயதுடைய தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

மாரவில, கிறிஸ்ட் மாவத்தையில் வசிக்கும் ஆர்.எப்.மரியகுமார் என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது மனைவி மாரவிலப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (3)

# 57 ஆவது டிவிஷன் படையணி மீது தாக்குதல் நடத்தப் புலிகள் திட்டமாம்

கொழும்பு, ஓக.22

படையின் 57 ஆவது டிவிசன் படையணி மீது பாரிய தாக்குதலை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சிறப்பு படையணிகளை கிளிநொச்சியில் குவித்திருக்கின்றனர் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

படையின் சகல படையணிகள் மீதும் தாக்குதல் நடத்த முடியாவிட்டாலும், வலிந்த தாக்குதலை மேற்கொண்டுவரும் முக்கிய படையணியான 57 ஆவது டிவிசன் மீது பாரிய தாக்குதலினை நடத்தி, அரச படையணிகளின் மத்தியில் தற்போது அதிகரித்துள்ள மன உறுதியை உடைக்கும் வகையில் விடுதலைப் புலிகள் தமது காய்களை நகர்த்தி வருகின்றனர்.

இதற்காக, மணலாறு பகுதியிலிருந்து தமது மோட்டார் படையணியை கிளிநொச்சிக்கு கொண்டு வந்துள்ளதுடன் தமது ஏனைய படையணிகளை இணைத்து ஒரு பாரிய தாக்குதலை நடத்த பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.


' அவ்வாறு ஒரு நடவடிக்கையை மேற்தொள்வதாயின் தமது வழமையான போர்த் தந்திரோபாயமான களமுனையில் பெட்டி அடித்துத் தாக்குதல் நடத்தும் முறையையே புலிகள் கைக்கொள்வார்கள். ஆனால், அவ்வாறான கள உத்தியை படையினர் தமது பல்குழல் ஏவுகணை தாக்குதல்கள் மூலம் உடைக்கும் உபாயத்தை அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது களமுனைகளில் முன்னேற்றம் கண்டுவரும் படையினருக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தி, அவர்களின் மன உறுதியை உடைத்து, அவர்களின் போர்த் தந்திரோபாயங்களை உடைப்பதற்கு விடுதலைப் புலிகள் விரும்பினால் அவர்கள் உடனடியாக - தொடர்ச்சியான - தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இதேவேளை, நாச்சிக்குடாவை நோக்கி முன்னேறும் இலங்கைத் தரைப் படையினருடன் படையின் சிறப்புப் படையினரும் கொமாண்டோ படையினரும் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர். இந்தக் கூட்டு அணி புலிகளின் விநியோகப் பாதைகளை இலக்கு வைத்து பதுங்கியிருந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 07 | 23.08.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.இ. 06.29வரை |
| நட்சத்திரம் : | பரணி |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |




யாழ்ப்பாணம், ஓக.22

சுன்னாகம், மயிலணி முத்துமாரி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறவுள்ளது.

* * *

அனலைதீவு மேற்கு சீத்தாசல்லி பூதேவி, ஸ்ரீதேவி சமேத மகாவிஷ்ணு ஆலய கும்பாபிஷேகம் இன்று காலை இடம்பெறவுள்ளது.

இதில் காரை எம்.பி.அருளானந்தம் 'கும்பாபிஷேக மகத்துவம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் மாலை 3.30 மணிக்கு திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம், ஓக.22


சாவகச்சேரி நுணாவில் மேற்கு மணங்குணாய் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் ஆறாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

செப்ரெம்பர் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் நூற்றாண்டு நினைவலைகள்

## (25 ஆவது ஆண்டு)



தோற்றம்
11.04.1936

மறைவு
26.08.1983

# திருமதி தியாகராசா மாணிக்கம்

ஈஸ்வரன்ரேடர்ஸ்,
இல.69,115, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கருவிலே எமைச்சுமந்து
உருவாய் வளர்த்தெடுத்து
அன்பால் அரவணைத்து
பாசத்தை எமக்களித்த அன்னையே!
எந்நாளும் மறவோம்- உன் பாசமதை
எங்கள் உயிர் உள்ளவரை- தாயே
உங்கள் நினைவும் எங்களுடன்....
என்றென்றும் உறைந்திருக்கும்....

ESWRAN TRADING CO.
NO.201B, DAM STREET,
COLOMBO-12.

*குறிப்பு:* அன்னாரின் ஞாபகார்த்தமாக
இன்று(22.08.2008)வெள்ளிக்கிழமை நல்லூர் வடக்கு வீதியில்
அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தில் அன்னதானம்
வழங்கப்படும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள்
மற்றும் அன்பர்கள், அடியார்கள் அனைவரையும் பங்கு
பற்றுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் கலங்கி நிற்கும்:
திரு.திருமதி துவாரகேஸ்வரன் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி/554254)

# ஸ்பெயின் விமான விபத்தில் 153 பேர் பலி; 19பேர் படுகாயம்



மெட்ரிட், ஓக. 22

ஸ்பெயினின் தலைநகரான மெட்ரிட்டிலுள்ள பரஜாஸ் விமானநிலைய ஓடு தரையில் இடம் பெற்ற விமான விபத்தில் இறந்தவர்களில் எண்ணிக்கை 153 ஆக உயர்ந்துள்ளது. இதில் 19 பேர் படுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர் என, ஸ்பெயின் அரசு தெரிவித்தது.

172 பேருடன் இவ்விமானம் புதன்கிழமை உள்ளூர் நேரப்படி பிற்பகல் 2.20 மணியளவில் கனேரி தீவை நோக்கிப் புறப்பட ஆயத்தமானது. எனினும் ஓடுதரையிலிருந்து விலகி ஓடி விபத்துக்குள்ளானதும் இதன் இடது இயந்திரத்தில் தீப்பற்றிக் கொண்டது என, மெட்ரிட் விமான நிலைய வட்டாரம் குறிப்பிட்டது. "ஓடு பாதையை விட்டு விலகி ஓடிய விமானப் பலத்த சத்தத்துடன் மோதுண்டது. நாங்கள் திடுக்கிட்டுப் பார்த்தோம். அங்கு தீப்பிழம்போடு, கரும்புகை மண்டலம் மேலே எழுந்தது'' என விபத்து நிகழ்ந்த பகுதியிலிருந்த ஸ்பானிய ஊடகவியலாளர் மனுவல் மொலினோ குறிப்பிட்டார்.

''விமானத்தின் பிற்பகுதி முற்றாக எரிந்து விட்டது. தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஹெலிக்கொப்டர்களும், தீயணைப் புப் படையும் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தன. காயமடைந்தோரை மீட்புப் பணியினர் மீட்டு அம்புலன்ஸ் வாகனங்களில் ஏற்றிக் கொண்டிருந்தனர்'' என நேரிற் பார்த்த பிரிட்டிஷ்காரரான அலன் ஜெம்மெல், பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

# அல்ஜீரியாவில் இரட்டைக்கார் குண்டுதாக்குதல் 12 தொழிலாளர்கள் மரணம்; 42 பேர் படுகாயம்

அல்ஜியர்ஸ், ஓக. 22

அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜியர்ஸுக்கு தென்-கிழக்கே உள்ள போய்ரா என்னுமிடத்தில், புதன்கிழமை அதிகாலை இராணுவ வீரர்களின் விடுதியொன்றும், பஸ்ஸொன்றும் இரட்டைக் கார்க் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகின. இவற்றில் 12 பேர் கொல்லப்பட்டனர். 43 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

தற்கொலைக் குண்டுதாரிகள், இரு கார்களில் குண்டுகளைக் கொணர்ந்து, இத்தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள். குண்டுகள் 15 நிமிடங்கள் வரை வெடித்துள்ளன. இத்தாக்குதல்களால் இராணுவத் தலைமையகமும், வெளிப்புற ஹோட்டலொன்றும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன என்று பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

''இராணுவ வீரர்களின் விடுதிக்கும் தலைமையகத்துக்குமிடையில் முதல் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்துப்பட்டுள்ளது. இரண்டாவது கார்க் குண்டுத் தாக்குதல் பஸ் தரிப்பு நிலையமொன்றில் நடத்துப்பட்டுள்ளது. கனேடிய எஸ்.என்.சி. லெவலின் நிறுவனத்தைச் சேர்ந்த அல்ஜீரிய தொழிலாளர்களை ஏற்றிச் செல்லும் பஸ்கள் தரிக்கும் நிலையமாகுமிது. இவர்கள் நீர்த்திட்டமொன்றில்பணிபுரிபவர்கள்''என பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.

# நளினியின் விடுதலை மனுவுக்குப் பதிலளிக்க மத்திய - மாநில அரசுகளுக்கு இறுதிக்கெடு!

## சென்னை உச்சநீதிமன்றம் புதனன்று விதித்தது

சென்னை, ஓக. 22

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, தம்மை விடுதலை செய்யக்கோரி தாக்கல் செய்த மனுவிற்கு பதில் மனுத்தாக்கல் செய்ய அரசுக்கு, உயர்நீதிமன்று இறுதிக் கெடு வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுதொடர்பான விவரம் வருமாறு:-

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, தம்மை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றத்தில் இரு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 10 ஆண்டுகள் சிறையில் தண்டனை அனுபவித்தவர்களை ஏற்கனவே தமிழக அரசு விடுவித்துள்ளது என்றும், ஆனால், 17 ஆண்டுகள் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் தன்னை விடுதலை செய்ய அரசு மறுத்துவிட்டது என்றும் கூறியிருந்தார்.

இதேபோல், இந்த வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோர் தங்களை முன் கூட்டியே விடுதலை செய்ய வேண்டுமென்று மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்கள் அனைத்தும் நீதிபதி முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

நளினி தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு, தமிழக அரசும், மத்திய அரசும் இன்னும் பதில் மனுத்தாக்கல் செய்யவில்லை. தமிழக அரசசட்டத்தரணி அருண் நீதிமன்றில் ஆஜராகி பதில் மனுத் தாக்கல் செய்ய அவகாசம் கேட்டார். இதேபோல மத்திய அரசுசார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எம்.ரவீந்திரன் பதில் மனுத் தாக்கல் செய்வதற்கு ஒருவாரகாலம் அவகாசம் கேட்டார். ஏற்கனவே பதில் மனுத்தாக்கல் செய்ய அவகாசம் கொடுக்கப்பட்டும், ஏன் பதில் மனுத் தாக்கல் செய்யவில்லை என்று நீதிபதி கேள்வி எழுப்பினார்.

மேலும் தமிழக அரசு சார்பில் அட்வகேட் ஜெனரல் இந்நீதிமன்றில் ஆஜராகவில்லையே என்று நீதிபதி கேட்டார். இனி ஒருவாரம் மட்டுமே கால அவகாசம் வழங்கப்படும் என்றும், அதற்குள் மத்திய அரசும், தமிழக அரசும் பதில்மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று 'கெடு' விதித்து நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். வழக்குவிசாரணையை வரும் 29ஆம் திகதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

பதில் மனுத் தாக்கல் செய்யாவிட்டால் நீதிமன்றம் தானே விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் என்று நீதிபதி கண்டிப்புடன் தெரிவித்தார்.


## தேவை

மூன்று சில்லு மோட்டார் வண்டி உடன் தேவை.
தொடர்புக்கு:-
மா.ஜெகதீஸ்வரன் No.75/8, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். T.P. 0774007223



## இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை
## COMMUNITY MOBILISERS - HRM 195

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விளம்பரம் இப் பத்திரிகையில் 19.08.2008 ஆம் திகதியில் வெளியிடப்பட்டது. இதற்கான முடிவு திகதி தவறுதலாக "29th September 2008" என வெளியிடப்பட்டுள்ளது. அதனை "29th August 2008" எனத் திருத்தி ஏற்றுக் கொள்ளவும்.

*கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,*
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை*
*73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*



## கட்டைவேலி- நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் (வ/து)
### கூட்டுறவு நகர் (CO- OP CITY) திறப்பு விழா

இடம் :- அம்பம் பழைய காரியாலயம்
சாமியன் அரசடிக்கு அருகாமையில்
காலம் :- நாளை (23.08.2008) சனிக்கிழமை மு.ப 11மணி
தலைவர் :- திரு.த.சிதம்பரப்பிள்ளை (சங்கத் தலைவர்)
பிரதம விருந்தினர்:- திரு.ஆ.சிவசுவாமி (மேலதிக அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்.)

**சிறப்பு விருந்தினர்கள்**
★ திரு பொ.சிவலிங்கம் (கூ.அ.உ.ஆணையாளர், யாழ் மாவட்டம்.)
★ திரு சி.சத்தியசீலன் (பிரதேச செயலர், கரவெட்டி.)
★ திரு பெ.கனகசபாபதி (தலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை.)

**கௌரவ விருந்தினர்கள்**
★ திரு.செ.கனகசபாபதி (கூ.அ.உ.ஆணையாளர், எண்பார்வை), யாழ் மாவட்டம்.
★ திரு இ.சிவஞானசுந்தரம்பிள்ளை (முகாமையாளர், மக்கள் வங்கி, நெல்லியடி கிளை.)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்,
கரவெட்டி. பணிப்பாளர்கள், பணியாளர்கள்.


## மரண அறிவித்தல்கள்

### க.அருளானந்தன்
(ஓய்வு பெற்ற அசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி, நாடக ஆய்வாளர், முன்னாள் உதவி ஆசிரியர், ஈழநாடு, வீரகேசரி)

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் கார்த்திகேசர் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி அருளானந்தன் நேற்று (21.08.2008) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் வியாபாரிமூலை, வதிரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி- சிதம்பரத்தின் ஏக புத்திரனும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை சேர்ந்த காலஞ்சென்ற முத்துக்குமாரு தம்பதிகளின் மூத்த மருமகனும் இரஞ்சிதமலரின்(ஆசிரியை, யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி) அன்புக் கணவரும், செந்தூரன் (அம்பிகை சுவிற்றி, மருதடி, பருத்தித்துறை), நவஜீவன் (போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு), தர்சன்(ஆங்கில பயிற்சி நெறி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, உள்ளகப் பயிற்சி ஆசிரியர், யா/சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), அரவிந்தன், பிரதாபன் (மாணவர்கள், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), கேகயன்(மாணவன், யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புளோரிடாவின் அன்பு மாமனாரும் தேவகியின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2008) வியாழக்கிழமை பி.ப. 2மணியளவில்அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'முருகவாசா,*
*கார்த்திகேசர் வீதி,*
*புலோலி மேற்கு, பருத்தித்துறை.*
*0212264703*

தகவல்:
திருமதி.இ.அருளானந்தன்
(மனைவி, ஆசிரியை, நெல்லியடி ம.ம.வித்தியாலயம், கரவெட்டி)

### கனகரத்தினம் நாகம்மா

அளவெட்டி தெற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் நாகம்மா நேற்று (21.08.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2008) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

***தகவல்:***
கனகரத்தினம் (கணவர்)


## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

*புத்தூர் கிழக்கு, குளத்தடிப் பிள்ளையார் ஆலய கட்டடப் பணிகளுக்காக மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி போட்டி நாளை மறுதினம் (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது.*

*மாட்டுவண்டிச் சவாரி உரிமையாளர்கள் காலம் தாழ்த்தாது சவாரித் திடலில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.*

*சவாரிப் பிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு போட்டியைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.*

புத்தூர் கிழக்கு, குளக்கட்டுப் பிள்ளையார்
புத்தூர். ஆலய நிர்வாகம்.



## JANASHAKTHI
L E A D E R S



We have a vision – to be the No.1 Insurer in Sri Lanka. The passion with which we pursue this goal is best reflected in our achievements to date. We are the only insurance company in Sri Lanka to earn an annual revenue of over Rs. 5.2 Billion within the shortest possible time, out-performing all other players in the industry. We've settled tsunami insurance claims in excess of Rs. 5.000 Mn. the highest by any Sri Lankan insurer. Our high service standards have earned us the title of the No. 1 Service Brand of the Year at SLIM Brand Excellence 2006. And we are well on course to achieve even greater feats.

It's about passion; the challenge to be No. 1. And the leaders it'll take to get us there. So if you've got what it takes, we've always got a place for you.

### District Sales Manager Jaffna

We have made great strides in the insurance industry ahead of our competitors within the same period of time, but to reach the pinnacle is what we are aspiring for.

As the head of the Sales Team in the District, you will be the driving force behind the dedicated sales and marketing team. Your team will promote a wide array of General and Life Insurance products including our flagship brands: "Janashakthi Full Option" and "Janashakthi Life Unlimited". Additionally you will be required to administer the activities of the branches in the district under your purview.

The person we have in mind should be a dynamic and self-motivated individual with excellent leadership skills to motivate and direct the sales force to achieve company objectives.

You will be required to posses a sound educational background with at least 5 years experience in sales, which should include 3 years experience at a managerial capacity.

If you feel you fit the bill for the above position, please forward your CV to the address given below or E-mail to viranthi@janashakthi.com within 07 days from the date of this advertisement, together with the names and contact information of two non-related referees.

Please indicate the position applied for on the top left corner of the envelop.

The Manager
JANASHAKTHI INSURANCE CO LTD
[illegible], [illegible] Road,
Jaffna.

JANASHAKTHI INSURANCE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த புதன்கிழமை வானத்தில் இரண்டு சந்திரன்கள் தோன்றுமா?

றியாட், ஒக. 13

செவ்வாய்க் கிரகம் எதிர்வரும் 27ம் திகதி பூமிக்கு மிக நெருங்கி வரவுள்ளதாகவும் அது பூமியில் இருந்து பார்க்கும் போது இரண்டாவது சந்திரன் போன்று தோற்றமளிக்கும் எனவும் அராபிய பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி உள்ளன.

எதிர்வரும் 27ம் திகதி செவ்வாய்க்கிரகமானது வானத்தில் பெரிய முழு நிலவு போன்று தோற்றமளிக்கும் எனவும் அதனால், வானத்தில் இரு சந்திரன் களைப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கும் எனவும் இணையத் தளங்கள்பல வற்றிலும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வானிலை நிபுணர்கள் மேற்படி எதிர்வு கூறல்களை நிராகரித்துள்ளனர்

செவ்வாய்க்கிரகம் ஒவ்வொரு 780 நாள்களுக்கும் ஒரு தடவை சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் பயணிக்கையில் பிரகாசமான தோற்றத்தை வெளிப்படுத்துவது வழமையாகவுள்ளது என எமிரேட்ஸ் வானிலை சபையின் இஸ்லாமிய சந்திர அவதான திட்டத் தலைவர் மொகமட் சொயுகத் அவதா தெரிவித்தார்.

மேற்படி செவ்வாக்கிரகமானது இவ் வருடம் மனித வெற்றுக் கண்ணுக்கு முழு நிலவு அளவு தோன்றுவது சாத்திமில்லை எனக் குறிப்பிட்ட அவர் 2287ஆம் ஆண்டில் அத்தகைய சந்திரத் தோற்றப்பாடு வானில் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கூறினார். (அ)

# கொட்டாஞ்சேனையில் பொலிஸ் கான்ஸ்டபிள் கொலையை அடுத்து முப்பது பேர் கைது!

கொழும்பு கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதி இரட்ணம் விளையாட்டரங்கிற்கு அருகில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை அன்று (19ஆம் திகதி) இனந்தெரியாத நபர்கள் வெட்டிக் கொன்ற சம்பவத்தையடுத்து, அப்பகுதியிலுள்ள 30 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை விடுவித்துத்தருமாறு கோரி உறவினர்கள் மேல்மாகாண சபை உறுப்பினர் திருமதி வேலம்மாள் செல்லசாமியிடம் கோரிக்கை விடுத்தனர். இதனைத் தொடர்ந்து அவர் தபால் தந்தி தொலைத் தொடர்பு பிரதியமைச்சர் எம்.எஸ். செல்லசாமியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அவர் உடனடியாக கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடனும் தொடர்புகொண்டதுடன் நேரடியாக கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்துக்கு சென்று கைதானவர்களைப் பார்வையிட்டது டன் அவர்களை உடனடியாக விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து 15 பேர் விடுவிக்கப்பட்டனர். மற்றவர்கள் விசாரணைகளின்பின் விரைவில் விடுவிக்கப்படுவர் என பொலிஸ் பொறுப்பதிகாரி உறுதியளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் சென்று சம்பவம் குறித்து விசாரித்துள்ளனர்.

கொலைச் சம்பவம் பல்கலைக்கழகத்துக்குள் இடம்பெற்றுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். (அ-1)

## நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பிணை முறிகளை நிறைவு செய்து அவர் பிணையில் சென்றார்.

மேற்படி விவகாரம் தொடர்பாக அமைச்சர் மேர்வினையும் மற்றும் அவரது சகாக் கள் மூவரையும் உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கடந்த திங்களன்று பொலிஸ்மா அதிபருக்கு கொழும்பு நீதிவான் மஞ்சுள திலகரட்ண உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றுக்காலை அமைச்சர் மேர்வின் மட்டும் தனியாக நீதிமன்றத்தில் தமது சட்டத்தரணிகள் மூலம் சரணடைந்தார். அவருக்குப் பிணை அனுமதி வழங்கும்படி அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தைக் கோரினர்.

பிணை காலத்தில் வேறு எந்தக் குற்றச் செயல்களிலும் ஈடுபடக் கூடாது என்றும் -

சாட்சிகளை அச்சுறுத்திக் குழப்புதல் போன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்படக் கூடாது என்றும்-

நிபந்தனை விதித்து, அதனடிப்படை யில் பிணையில் செல்ல அவருக்கு அனுமதி அளித்தது நீதிமன்றம்.

இந்த நிபந்தனைகளை அவர் மீறுவாரானால் அவரது பிணை அனுமதி ரத்தா கும் என்றும் -

அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் படுவார் என்றும் - நீதி வான் தெரிவித்தார். (சி)


**PERSONAL CLASSES**
364, Stanly Road. (Near DMI)
தமிழ்- K.தர்மராஜா G.A.Q☞9-10
BA - I☞10-11
Hin.cul- சிறீ
Drama- கலகேஸ்வரன் பிரபாகரன்
Eco- பிரணவன்
**ENGLISH**
BA- I, GAQ- Paper class
By R.Maheswaran (Dip- in- Eng)
ஆரம்பம்:- நாளை 9.00
23.08.2008
உத்தியோகத்தர்களுக்கான
Sinhala classes 10-2 வரை


## மூழ்கிய இலங்கைக்கப்பல் கசினோ வர்த்தகருடையது

கொழும்பு, ஒக 21

இந்தியாவிலிருந்து அரிசி ஏற்றிக்கொண்டு வரும் வழியில் பங்களாதேஷ் சிட்டகொங் துறைமுகத்தில் மூழ்கிய கப்பல் கொழும்பில் உள்ள பிரபல கசினோசூதாட்ட வர்த்தகரான தம்மிக பெரோவுக்கு சொந்தமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது 'எம்.வி.பதுலுவலி' என்ற கப்பலே கனாமா கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்தக்கப்பலில் மூவாயிரம் மெற்றிக் தொன் அரிசி கொண்டு வரப்பட்டது தெரிந்ததே. (அ-01)

## குமுழமுனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 30), செந்தூரன் (வயது 37), எஸ். பொன்னம்பலம் (வயது 40) ஆகியோரே காயமடைந் துள்ளனர்.

இவர்கள் வயலில் அறுவடை வேலையில் ஈடுபட்டிருந்த போதே ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளனர். (அ-1)

## துணுக்காயை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் தெரிவித்தது.

நேற்று நண்பகல் 11.35 மணியளவில் அங்கு மோதலொன்று இடம்பெற்றது. இதன் பின்னர் விடுதலைப் புலிகள் இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

எனினும் அதன் பின்னர் நேற்று நள்ளிரவு வரை முன்நகர்வு குறித்து படைத் தரப்பினரால் எந்தத் தகவலும் வெளியிடப் படவில்லை. (அ-சி)


**வெளிவந்து விற்பனையாகின்றது**
2008-O/L புதிய பாடத்திட்டத்திற் கமைவாக தயாரிக்கப்பட்ட
**தாயங்கள் (MATRICES)**
ஆசிரியர்:
By K. Umaharan (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
கிடைக்கும் இடங்கள்:-
★ பூபாலசிங்கம் புத்தகசாலை (யாழ்ப்பாணம்)
★ பாக்கியா புத்தகசாலை (கொக்குவில்)
★ எடிசன் அக்கடமி (யாழ், நல்லூர், கொக்குவில்)
★ லிங்கம் கொமினிகேசன் (இணுவில்)



**IBMS**
**கணனிக்கற்கை நெறிகள்**
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
விபரங்கள் 01ம் திகதி உதயன் பத்திரிகையில்...



**வெளிவந்துவிட்டது**
உயிர்ப் பல்வகைமை
க.பொ.த(உ/த) சுயகற்றல் வழிகாட்டி
*(கடந்தகால வினாக்களை உள்ளடக்கியது)*
தொகுப்பு: செ. இளங்கோ
(B.Sc Dip in Ed)
பிரபல புத்தக ... கொள்ளலாம்


# சரண் அடைந்த பின்னர் வீடுதிரும்பிய இளைஞர் நேற்றுக் காலை சுட்டுக்கொலை

உடுப்பிட்டி, ஒக. 22

உயிர்அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவில் சரண் அடைந்து, யாழ். சிறைச்சாலையில் இருந்து வீடு திரும்பிய இளைஞன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

உடுப்பிட்டி, ஆதிமலை, கோப்பைச் சேர்ந்த நடராஜா மரூஸ் (வயது 26) என்பவரே கொலையுண்டவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித் துறை மேலதிக நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா விசாரணைகளை நடத்தினார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரண் அடைந்த பிரஸ்தாபநபர் கடந்த சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வீடு திரும்பியருந்தார்.

நேற்றுக்காலை சுமார் 6.15 மணியளவில் காலைக்கடன் கழிப்பதற்காக வெளியே சென்றவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் சுட்டுவிட்டுத்தப்பிச் சென்றதாக விசாரணையில் தெரிவிக்கப் பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார். (அ-1-155-218)

## பத்திரிகையாளர் அருளானந்தன் காலமானார்

யாழ்ப்பாணம், ஒக. 22

குடாநாட்டிலுள்ள மூத்த பத்திரிகையாளரான க.அருளானந்தன் நேற்று தமது 60வது வயதில் காலமானார்.

1965ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் பத்திரிகையியழ் டிப்ளோமா கற்கை நெறியில் சித்தியடைந்த அவர் எழுபதுகளில் ''ஈழநாடு'' பத்திரிகையிலும் எண்பதுகளில் ''வீரகேசரி'' பத்திரிகையிலும் உதவி ஆசிரியராக பணியாற்றியிருந்தார்.

பத்திரிகை துறையில் முழுநேரம் பணியிலிருந்து விலகிய பின்னர் கண்டியிலும் அதன் பின்னர் ஹாட்லிக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் நாடகத் துறை ஆய்வில் ஆர்வலராக இருந்தார். (அ-1)

## சமூக காடு உருவாக்கல் ஆரம்பவிழா நாளை

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனதின் ஏற்பாட்டில் சமூக காடு உருவாக்கல் ஆரம்பவிழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கரைச்சி பொதுமயானத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் சி. றேகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுழிபுரம் பிரதேசசபையின் செயலாளர் எஸ். புத்திசிகாமணி கலந்து கொள்வார். (1)

## வடக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனரக ஆயுதங்களை வைத்துள்ளனர். ஆகவே விடுதலைப்புலிகள் மூர்க்க மான தாக்குதல்களை நடத்தக்கூடும். அவர்களின் இப்போதைய மௌனம் படையினருக்கு நல்லதாக அமையாது.

படை முன்நகர்வுகளால் விடுதலைப் புலிகள் பல மடைந்தாலும், யுத்த முன்னெடுப் புக்கள் இனப்பிரச் சனைக்கு தீர்வாக அமையாது. உடனடியாகவே அல்லது ஆறுத லாகவே நாங்கள் பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டியிருக்கும்- என்று உள்ளது. (அ)

## வன்முறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பாதாகவும் -

இதற்கான உத்தரவு சகல பொலிஸாருக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை யில் இருந்து தேர்தல் முடிவடைந்த பின்னர் இரு தினங்கள் வரை இரண்டு மாகாணங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் ஆணையாளரின் வேண்டுகோளைத் தொடர்ந்து அப் பகுதிகளில் இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்களிப்பு சுமுகமாக நடைபெறுவதற்கு இராணுவத்தின் ஒத்துழைப்பைப் பொலிஸார் கோரும் பட்சத்தில், இராணுவம் உதவி வழங்கத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சரின் சகோதரர் தாக்கப்பட்டார்

இதேவேளை, அரசின் முக்கிய அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் விஜயானந்த சிறிசேன அங்கு தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சரின் சகோதரர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளார். காலில் பலத்த காயங்களுடன் அவர் உடனடியாக சிகிச்சைக்காகக் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டுள் ளார்.

இதேவேளை, புதன்கிழமை அநுராதபுரத்தில் அரச ஆதரவுக் கும்பலொன்று உள்ளூர் மருத்துவர் ஒருவரின் வீட்டையும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களின் அலுவலகம் ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளது.

ஜோன் புலே எனும் மருத்துவரின் வீட்டைச் சுற்றிவளைத்த கும்பலொன்று கட்டடத்தைச் சேதப்படுத்தித் தீமூட்டி எரித்ததாகவும் பொலிஸார் இந்த அராஜகத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சுபாஷினி சார்ள்ஸின் அலுவலகத்தின் மீதும் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கேகாலையில் செவ்வாய்க்கிழமை ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் குழுவொன்று தாக்குதலை மேற்கொண்டதாகவும் கூறப்பட்டது.

பரவலாக இடம்பெற்றுவரும் தேர்தல் வன்முறைகள் நாளை வாக்களிப்பு சமயம் உச்சக்கட்டத்தை அடையும் என அஞ்சப்படுகின்றது. (அ-சி)


**Ram Communication**
உங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு கடிதங்கள், பொதிகள், VCDகள் என்பவற்றை மிக குறைந்த விலையிலும் துரித சேவைகள் ஊடாக பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும். மேலும் பல சேவைகளாக I.D.D, Internet, Browsing, Typing, Laminating, E-mail, Printing, போன்ற தேவைகள் நிறைவேற்ற நாட வேண்டிய ஒரே இடம்
(Ram Communication)
E.mail- N.Ramcom @ Yahoo.Com.
Tel:- 021 222 8428
Fex:- 021 222 2007



**STUDY IN SINGAPORE**
மாணவர்களே உங்களுக்கோர் அரிய வாய்ப்பு
☞ சட்டக் கல்லூரியில் கற்பதற்கு
☞ கணனித்துறையில் பட்டம் பெறுவதற்கு
☞ படிப்புடன் கூடிய வேலைவாய்ப்பு
☞ மற்றும் உங்களுக்குத் தேவையான சகல பாடநெறிகளும் எங்களால் பெற்றுத்தர முடியும்.
★ எந்தவித முன்கட்டணமுமின்றி நம்பிக்கையுடன் எமது சேவை.
☞ ஒருவருட கற்கைநெறியை பூர்த்திசெய்த மாணவர்கள் UK, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் நியூஸ்லாந்து போன்ற நாடுகளில் கல்வியைத் தொடர விண்ணப்பிக்கும் வாய்ப்புண்டு.

மாணவர்களே உங்கள் விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்
தொடர்புகளுக்கு: 42/2, College Road Lane, Neeraviady, Jaffna. 077-6569663. E-mail: trystar_2000@ yahoo.com, trystar_2000 @ yahoo.com.sg


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org